# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: எட்டு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2038 ஆனி 22 வெள்ளிக்கிழமை (06.07.2007) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 199





# யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை கடைப்பிடிக்க தமிழீழ விடுதலைப்புலிகள் உறுதியளிப்பு

## போர் நிறுத்த கண்காணிப்புக்குழு தெரிவிப்பு



(வவுனியா)

யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை தொடர்ந்து கடைப்பிடிக்க தாம் உறுதியாக இருப்பதாக விடுதலைப்புலிகள் தம்மிடம் தெரிவித்ததாக இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப் புக்குழு தெரிவித்துள்ளது. கண்காணிப்பாளர் களை கூடிய அளவில் செயற்படுத்தவேண்டும் எனவும் புலிகள் வற்புறுத் தியுள்ளனர். (08 ஆம் பக்கம் பார்க்க)

## கப்பமாக பெறப்பட்ட பணம் கரீபியன் தீவில் உள்ள வங்கியில்

### ஐக்கிய தேசியக் கட்சி தெரிவிப்பு

(கொழும்பு)

கடத்தல்களுடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ள நிசாந்த கஜதீரவிடம் குற்றப்புலனாய்வுப் பொலிஸார் நேர்மையான முறையில் விசாரணை நடாத்துவார்களா? என்பது தொடர்பில் எமக்கு நம்பிக்கையில்லை என்று ஐக்கிய தேசியக்கட்சியின் கண்டி மாவட்ட எம்.பி. லக்ஷமன் செனிவிரட்ண தெரிவித்தார்.

ஆட்களைக்கடத்தி கப்பமாகப் பெறப் பட்ட பணம் கரீபியன் தீவில் உள்ள வங்கிக் கணக்கொன்றில் (08 ஆம் பக்கம் பார்க்க)

## அரசியல் தலையீடுகளால் நீதித்துறை பாதிக்கப்படக் கூடாது

(கொழும்பு)

அரசில் தலையீடுகளால் நீதித்துறை பாதிக்கக்கூடாது என்று ஊடகத்துறை அமைச்சர் அநுர பிரியதர்சன யாப்பா தெரிவித்துள்ளார். நீதித்துறைத் திருத்தச்சட்ட பிரேரணை நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் தாக்கல் செய்யப்பட்டது. அப் பிரேரணை மீதான வாதத்தை தொடங்கிவைத்து அநுரபிரியதர்சன யாப்பா பேசியதாவது;

அரசியல் தலையீடுகளால் நீதித்துறை பாதிப்படையக்கூடாது. நீதித்துறையின் சுதந்திரத்தையும் பாதுகாப்பையும் உரிய முறையில் வழங்குவதே அரசாங்கத்தின் பிரதான நோக்கமாகும்.

மேல் நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கையை 40 (08 ஆம் பக்கம் பார்க்க)

## கடந்த ஒரு மாத காலத்தில் மட்டும் 35 இராணுவத்தினர் உயிரிழப்பு

### பிரதமர் நாடாளுமன்றில் உரை

(கொழும்பு)

கடந்த ஒரு மாதத்தில் மட்டும் 35 இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர் என்றும் 161 பேர் படுகாயமடைந்துள்ளனர் என்றும் பிரதமர்ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார். நாடாளுமன்றத்தில் நேற்று அவசரகாலச்சட்ட நீடிப்பு விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இதனைத்தெரி வித்தார். தொப்பிக்கல காட்டுப் பகுதியில் இராணுவத்தினர் கடும் தாக்குதல்களை மேற்கொண்டு புலிகளை விரட் டியடித்துள்ளனர். புலிகளின் வான்,கடல் மற்றும் தரை வழித்தாக்குதல்களையும் இராணுவத்தினர் ஒரு மாதத்திற்குள் முடக்கியுள்ளனர்.

புலிகளுக்கு உணவு,மருந்து வழங்கும் பாதை மூடப்பட் (08 ஆம் பக்கம் பார்க்க)

## கரும்புலிகள் நாள் நிகழ்வில் தலைவர் பிரபாகரன் பங்கேற்பு

(கிளிநொச்சி)

பல நூற்றுக்கணக்கான கரும்புலிகள் மத்தியில் நினைவுச்சுடரேற்றி கரும்புலி மாவீரர்களை தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் நினைவு கூர்ந்தார். சிறப்பாக அமைக்கப்பட்ட கரும்புலிகள் நினைவாலயத்தில் பல நூற்றுக்கணக்கான கரும்புலிகள் மத்தியில் முதற்கரும்புலி கப்டன் மில்லர் வீரச்சாவடைந்த நேரமான இரவு 7.05 மணிக்கு நினைவுச் சுடரினை அவர் ஏற்றினார்.

அதனைத் தொடர்ந்து அகவணக்கம் நிறைவடைந்ததும் முதற்கரும்புலி மாவீரன் கப்டன் மில்லரின் திருவுருவப்படத்திற்கு ஈகச்சுடரேற்றி மலர்மாலை அணிவித்தார். இந் நிகழ்வில் (08 ஆம் பக்கம் பார்க்க)

## ஜே.வி.பியுடன் மங்கள தலைமையிலான குழு சந்தித்து தேசிய முன்னணி குறித்து ஆராய்வு

(கொழும்பு)

ஜே.வி,பியின் பிரதிநிதிகளுக்கும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் மக்கள் பிரிவினருக்குமிடையிலான முக்கிய சந்திப்பொன்று நேற்று முன்தினம் பெலவத்தையில் உள்ள ஜே.வி.பியின் தலைமையகத்தில் இடம் பெற்றது. சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் மக்கள் பிரிவின் உறுப்பினர்களான மங்கள சமரவீர மற்றும் சிறிபதி சூரியாராட்சி ஆகியோரும் ஜே.வி.பி.சார்பில் அதன் தலைவர் சோமவன்ச அமரசிங்க, பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா, பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச மற்றும் அநுரகுமார திஸாநாயக்க ஆகியோரும் இச் சந்திப்பில் கலந்து கொண் டனர்.

இச் சந்திப்பின்போது நாட்டின் தற்போதைய அரசியல் சூழ்நிலை தொடர்பாகவும் எதிர்காலத்தில் ஜே.வி.பி.அமைக்கவுள்ள தேசிய முன்னணி குறித்தும் விரிவாக ஆராயப்பட்டுள்ளது எனவும் தெரியவருகிறது.

இதேவேளை இச் சந்திப்பின் இறுதியில் ஜே.வி.பி.,மங்கள (08ஆம் பக்கம் பார்க்க)

## தொழிலாளர் காங்கிரசுடன் மங்கள சமரவீர பேச்சு

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர்களான மங்கள சமரவீர மற்றும் சிறிபதி சூரியாராட்சி ஆகியோர் நேற்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறுமுகம் தொண்டமானை சந்தித்து உரையாடியுள்ளனர். நேற்று முற்பகல் கொழும்பிலுள்ள இலங்கை தொழிலாளர் காங்கிரசின் (08ஆம் பக்கம் பார்க்க)

## 22ஆவது முறையாக அவசரகாலச் சட்டம் நீடிப்பு

(கொழும்பு)

22ஆவது முறையாக அவசரகால சட்டம் நேற்று நீடிக்கப்பட்டுள்ளது. நாடாளுமன்றம் நேற்றுக் காலை கூடியபோது அவசரகாலச் சட்ட நீடிப்பு தொடர்பான விவாதத்தை பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தொடங்கி வைத்தார். அவசரகாலச் சட்ட நீடிப்பு விவாதத்தை தொடர்ந்து அதன் (08 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவம்-புலிகள் மோதல்

(மன்னார்)

மன்னார் தம்பனைப் பகுதியில் இராணுவத்தினரின் முன்னேற்ற முயற்சி தமிழீழ விடுதலைப்புலிகளால் முறியடிக்கப்பட்டதில் 10 இற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளதாக விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர். மன்னார் தம்பனைப் பகுதியூடாக நேற்று காலை 6.15 மணியளவில் இராணுவத்தினர் பின்தள எறிகணைச் சூட்டாதரவுடன் முன்னேற்ற முயற்சியை மேற்கொண்டனர்.

இம் முன்னேற்ற முயற்சிக்கு எதிராக விடுதலைப்புலிகள் நடத்திய இரண்டு மணி நேர எதிர்த்தாக் (08 ஆம் பக்கம் பார்க்க)

## சூட்டுக்காயங்களுடன் இரு இளைஞரின் சடலம் மீட்பு

(அம்பாறை)

அம்பாறை பொத்துவில் முகாளிக்கடையில் துப்பாக்கிச் சூட்டுக்காயங்களுடன் இரண்டு இளைஞர்களின் சடலங்கள் நேற்று அதிகாலை மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். காஞ்சிரங்குடா பகுதிக்குள் ஊடுருவிச் சென்ற (08 ஆம் பக்கம் பார்க்க)

## இறுதித்தீர்வை முன்வைக்குமாறு யசூசி அகாஷி வேண்டுகோள்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு பிரச்சினைக்கான இறுதித் தீர்வை அனைத்துக் கட்சிக் குழுவினூடாக முன்வைக்குமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரிடம் யப்பானின் அமைதி முயற்சிகளுக்கான சிறப்பு பிரதிநிதி யசூசி அகாஷி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கடந்த யூன் மாதம் 26 ஆம் திகதி ஒஸ்லோவில் நடைபெற்ற இணைத் தலைமை நாடுகளின் கூட்டத்தை தொடர்ந்து இரு தலைவர்க (08 ஆம் பக்கம் பார்க்க)


உள்ளே

தரிசனம்

சிறப்புப் பார்வை

# வெப்ப அதிகரிப்பால் விபரீதம் ஆரம்பமா?

## ஆய்வாளர்கள் அச்சம்

உலக வெப்பம் அதிகரிப்பதால் விபரீத விளைவுகள் ஆரம்பமாகி விட்டதா? என்று நிபுணர்கள் அச்சம் தெரிவித்துள்ளனர். உலக வெப்பம் அதிகரித்து வருகிறது. செயற்கை எரிபொருள் அதிகம் பயன்படுத்துவதால் வெப்பம் அதிகரிக்கத் தொடங்கி விட்டது. இது இப்படியே போனால் 2020 ஆம் ஆண்டில் உலகில் பெரும் அழிவுகள் ஏற்படும் என்று நிபுணர்கள் ஏற்கனவே எச்சரித்து விட்டனர்.

இப்போதே பனிப்பாறைகள் உருகும் வேகம் அதிகரித்துவிட்டது. வானிலை மாற்றம் ஏற்படவும் ஆரம்பமாகிவிட்டது. இந்தியா, பாகிஸ்தான் உட்பட சில நாடுகளில் வெள்ளம் அதிகரிக்க வெப்பமயமாதல் தான் காரணம் என்று நிபுணர்கள் சந்தேகிக்கின்றனர்.

வானிலை மாற்றம் ஆராய்ச்சி தொடர்பாக பிரிட்டன் ஈஸ்ட் ஆங்கிலியாப் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் ஆலோசனை நடத்தினர். அதன் பின் தலைவர் பில் ஜோன்ஸ் கூறியதாவது,

உலகின் வெப்ப நிலை கடந்த 1860 ஆம் ஆண்டுக்கு முன் ஓரிரு ஆண்டுகள் மிகவும் அதிகரித்தது. அதன் பின் 1998 ஆம் ஆண்டு வெப்பம் மிக அதிகமாக இருந்தது. 2 ஆவது முறையாக கடந்த ஏப்ரல் மாதம் எடுத்த அளவை வைத்துப் பார்த்தால் 2 ஆவது அதிக வெப்பம் நிலவிய ஆண்டுஎன்று சொல்ல முடியும்.

வரட்சி அதிகரித்ததால்தான் பனிப்பாறைகள் உருகி புயலும் அதிகரித்து வெள்ளம் ஏற்பட்டுள்ளது. சமீபத்தில் இந்தியா, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் நாடுகளில் வெள்ளத்தில் 500 பேர் உயிரிழந்தனர். அசாதாரணமாக ஏற்பட்ட மழை வெள்ள சம்பவங்களை வைத்துப் பார்க்கும்போது உலக வெப்பமயமாதல் விபரீதம் ஆரம்பித்து விட்டதாகவே சந்தேகிக்கப்படுகின்றது.

இனிவரும் ஆண்டுகளில் இப்படி திடீர் புயல், வெள்ளம், வரட்சியும் அதிகரிக்கலாம். இவ்வாறு பில் ஜோன்ஸ் கூறினார். (ச-5)

# பதில் உபதபால் அதிபர்களை நிரந்தரமாக்க நடவடிக்கை

## தபால் தொலைத்தொடர்பு அமைச்சர் உறுதி

தற்போது கடமையிலுள்ள சகல பதில் உபதபால் அதிபர்களையும் அமைச்சரவை அனுமதியுடன் நிரந்தரமாக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று தபால் தொலைத்தொடர்பு அமைச்சர் ரவூப் ஹக்கீம் உறுதியளித்துள்ளார்.

அண்மையில் காத்தான்குடிக்கு விஜயம் மேற்கொண்ட அமைச்சரைச் சந்தித்த அகில இலங்கை தமிழ் பேசும் உபதபால் அதிபர் சங்கத் தலைவர் ஏ.ஜோர்ஜ்பிள்ளையிடமே அமைச்சர் இவ்வாறு உறுதியளித்துள்ளார்.

இச் சந்திப்பின்போது உப தபால் அதிபர்களின் பிரச்சினைகள் தொடர்பான மகஜர் ஒன்றை அமைச்சரிடம் சமர்பித்ததுடன் நிரந்தரமாக்கப்படாத உபதபால் அதிபர்களைப் போட்டிப் பரீட்சை மூலம் தெரிவு செய்து நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதால் நீண்டகாலமாக பதில் உப தபால் அதிபர்களாகக் கடமையாற்றுபவர்கள் பாதிக்கப்படுவார்கள் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதனைக் கருத்திற்கொண்டு உரிய நடவடிக்கை எடுக்குமாறும் ஜோர்ஜ்பிள்ளை, அமைச்சரிடம் வேண்டுகோள் விடுத்தார்.

வாராந்த அமைச்சரவைக் கூட்டத்தில் இது தொடர்பாக அனுமதி பெற்று பதில் உபதபால் அதிபர்களை நிரந்தரமாக்க நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்த அமைச்சர், தபால் திணைக்களத்தை ஒரு இலாப மீட்டும் நிறுவனமாகச் செயற்படுத்த இத் திணைக்களத்தின் அனைத்து அதிகாரிகளும் ஊழியர்களும் பாடுபட வேண்டும் என வேண்டுகோள் விடுத்தார். (எ-5)

## நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் 'கல்லூரிச் சஞ்சிகை' வெளியீட்டு விழா நாளைக் காலை 9.30 மணிக்கு நடைபெறும். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சங்கானை சிவப்பிரகாசம் வித்தியாலய அதிபர் திருமதி ச.யோகேஸ்வரன் கலந்து கொள்கின்றார். (ச)

# சந்திரிகா தீர்மானம்

(கொழும்பு)

வறுமை நிவாரணக்குழுவின் ஆலோசகர் சபை உறுப்புரிமையை ஏற்றுக் கொள்ள முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இணக்கம் தெரிவித்துள்ளார்.

முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரனின் அழைப்பை ஏற்று சந்திரிகா இத் தீர்மானத்தை எடுத்துள்ளதாக அவரின் அலுவலகம் செய்தி வெளியிட்டுள்ளது. (ச)

# சிகரெட்டின் விலை 50 சதத்தால் உயரும்

(கொழும்பு)

புகைப்பிடிப்பவர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சியை ஏற்படுத்தும் நோக்கில் சில சிகரெட் வகைகளின் விலைகளை 50 சதத்தால் அதிகரிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.

போதைக்கு முற்றுப்புள்ளி என்ற திட்டத்தின் கீழ் புகைப்பிடிக்கும் பழக்கத்தைக் குறைக்கும் நோக்கில் நிதி திட்டமிடல் அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இப் பிரேரணையை முன்வைத்திருந் தார்.

அத்துடன் வாழ்க்கைச் செலவைக் குறைக்கும் நோக்கில் ரின் மீன், கடலை மற்றும் பயறு ஆகிய உணவுப்பொருள்களுக்கான ஒன்றிணைக்கப்பட்ட பெறுமதி மீதான வரியை 15 வீதத்திலிருந்து 5 வீதமாகக் குறைக்கவும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது. (ச-5)

# மனிதாபிமானச் சட்டங்களை இருதரப்பும் மதிக்க வேண்டும்

## ஐ.நாவின் வதிவிடப் பிரதிநிதி கோரிக்கை

(கொழும்பு)

மோதலில் ஈடுபட்டுள்ள இருதரப்பினரும் சர்வதேச மனிதாபிமானச் சட்டங்களுக்கு அமைவாக மனிதநேயப்பணியாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும் என ஐக்கிய நாடுகளின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி ஜோனாவான் ஜேர்பன் வலியுறுத்தினார்.

படுகொலை செய்யப்பட்ட செஞ்சிலுவைச் சங்கப் பணியாளர்கள் இருவரின் நினைவஞ்சலி நிகழ்வு நேற்றுமுன்தினம் கொழும்பில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர்இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்து உரையாற்றிய ஜோனாவான் மேலும் கூறியதாவது,

கடத்தல்களும் கொலைகளும் வன்முறைகளும் அதிகரித்துச் செல்லும் சூழ்நிலையை ஏற்றுக் கொள்ள முடியாது. இப்பணியாளர்களது படுகொலையை ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூன் வன்மையாகக் கண்டித்துள்ளார்.

அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் சகல சந்தர்ப்பங்களிலும் சர்வதேச மனிதாபிமானச் சட்டங்களை மதித்து நடக்க வேண்டும். அதன்கீழ் மனிதநேயப் பணியாளர்களின் பாதுகாப்பை இருதரப்பும் உறுதிப்படுத்த வேண்டும் என்றார். (எ-1)

## இலவச வழிகாட்டல் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

பகவான் ஸ்ரீ சத்யசாயி சேவா நிறுவன இளைஞர் சபையினரால் க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கான இலவச வழிகாட்டல் கருத்தரங்கு நாளைமுதல் எதிர்வரும் 19 ஆம் திகதி வரை நடாத்தப்படவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழகத்திற்கு முன்பாகவுள்ள பகவான் ஸ்ரீ சத்ய சாயி சேவா நிலையத்தில் காலை 8.30 மணிக்கு இக் கருத்தரங்கு ஆரம்பமாகும். இக் கருத்தரங்கு வழிகாட்டலில் கலந்து கொள்வோருக்கு இலவசமாக பாடக்குறிப்புக்கள், பரீட்சை மாதிரி வினாவிடைகள் என்பனவும் வழங்கப்படவுள்ளதாக இளைஞர் சபையினர் அறிவித்துள்ளனர்.

நாளை நடைபெறும் கருத்தரங்கில் யாழ்.ஸ்ரான்லிக் கல்லூரி பொருளியல் ஆசிரியர் வி.கருணாகரன் விளக்கவுள்ளார். (ச)

## நேர்முகத் தேர்வு திகதி மாற்றம்

எதிர்வரும் 8 ஆம் 15 ஆம் திகதிகளில் நடைபெறவிருந்த இலங்கை அதிபர் சேவை நேர்முகத் தேர்வு எதிர்வரும் 17,18 ஆம் திகதிகளில் நடைபெறும் என யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் வே.தி. செல்வரத்தினம் அறிவித்துள்ளார். தோர்வாளர்கள் மாற்றப்பட்ட திகதிகளில் சமூகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்

# இராசிபலன்

06.07.2007

(ஆனி 22 வெள்ளிக்கிழமை)

சஷ்டி பிற்பகல் 1.18 மணிவரை

பூரட்டாதி பிற்பகல் 04.06 மணி வரை

இராகுகாலம் 10.28-11.58 மணிவரை

சுபநேரம் 05.58-07.28 மணிவரை

| | |
|---|---|
| மேடம்:- | பிதா சிந்தை, காரிய அலைச்சல், பண விரயம், சயன சுகக்குறைவு. |
| இடபம்:- | தெய்வதரிசனம், தொழில்நன்மை, பொருள் வருவாய், நண்பர்கள் சந்திப்பு. |
| மிதுனம்:- | கடின உழைப்பு, பிறர் உதவி, தூரதேச செய்தி, போசனசுகம். |
| கடகம்:- | ஆன்றோர் ஆசி, புதிய திட்டமிடல், வயிற்று வலி, முயற்சி தாமதம். |
| சிங்கம்:- | எதிர்பாராத அச்சம், போசன சுகம், காரிய தடங்கல், தெய்வசிந்தை. |
| கன்னி:- | களஸ்திர நன்மை, தெய்வதரிசனம், எடுத்த கருமங்கள் கைகூடும், விருந்துபசாரம். |
| துலாம்:- | பகைவரால் நன்மை, செய்தொழில் விருத்தி, உடல் நலம், திடீர் பயணம். |
| விருச்சிகம்:- | வியாபார நன்மை, தாழ்ந்த சுபாவம், காரிய இடையூறு, அதிகசெலவு. |
| தனுசு:- | தன்னம்பிக்கை குறைவு, வரீகனசுகம், சுபசெலவு, புதிய விடயம். |
| மகரம்:- | தெய்வதரிசனம், உறவினர் சந்திப்பு, பொருள்சேர்க்கை, காரிய சித்தி. |
| கும்பம்:- | மாதர் நட்பு, விவாதம், வேலைச்சுமை, காரிய தடங்கல். |
| மீனம்:- | வெகுமானம், புதிய சிந்தை, தெய்வதரிசனம், பெரியோர் சந்திப்பு. |

-வளவன்

# பின்னுறுதித் தீர்வை யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

தேவராசா ஸ்டாலின் சுதராசா
203, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
-வழக்காளி

வழ.இல.758/மணநீக்கம்

எதிர்
ஸ்டாலின் சுதராசா பெண்
ஜெயகௌரி
மறுநாமம்: பொன்னுத்துரை மகள்
ஜெயகௌரி
கோவில்குளம், வவுனியா.
தற்போதைய விலாசம் தெரியாது
-எதிராளி

இவ்வழக்கு 2007 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 11 ஆம் திகதி யாழ்ப்பாண மாவட்ட நீதிபதி திரு.இ.த.விக்னராசா அவர்கள் முன்னிலையில் வந்தபோது வழக்காளியும், வழக்காளி சார்பில், சட்டத்தரணி திரு.சபா ரவீந்திரன் அவர்களும் பிரசன்னமாயிருக்க எதிராளி சமுகமின்றி, எதிராளிக்கு 'வலம்புரி' தேசிய பத்திரிகை மூலம் விளம்பரப்படுத்தல் மூலம் அழைப்புக் கட்டளை பதில் சேவகம் செய்யப்பட்டும், எதிராளி சமுகமளிக்கத் தவறியமையால் இவ்வழக்கு இன்று ஒரு முக விளக்கத்திற்கு எடுக்கப்பட்டு, வழக்காளியின் பதிவு பெற்ற சட்டத்தரணி திரு.சபா ரவீந்திரன் அவர்கள் வழக்காளியின் சாட்சியத்தை நெறிப்படுத்த மன்றின் அனுமதியைக் கோரி, மன்றின் அனுமதியுடன் வழக்காளியின் சாட்சியம் நெறிப்படுத்தப்பட்ட பின்னர், வழக்காளியின் பிராது, 'வ -1' ஆவணம், வழக்காளி இன்று மன்றில் அளித்த சாட்சியம் ஆகியவற்றை வழக்கேட்டுடன் சேர்த்துப் பரிசீலித்து வழக்காளி பிராதில் கோரிய நிவாரணங்களைப் பெறத் தகுதியுடையவர் எனக் கண்டு பின்வருமாறு கட்டளையிட்டுத் தீர்ப்பளிக்கப்படுகின்றது.

எனவே வழக்காளிக்கும் எதிராளிக்கும் 2002 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 17 ஆம் திகதி நிறைவேறிய பதிவுத் திருமணத்தை எதிராளி வேண்டுமென்றே வழக்காளியை விட்டுப் பிரிந்து சென்று திருமண வன்ம உறவறுப்புக் குற்றம் புரிந்தமையால் வெற்றும்வெறிதுமானதெனக் கட்டளையிட்டுத் தீர்ப்பளிக்கப்படுகின்றது.

இப்பின்னுறுதித் தீர்வையானது வலம்புரி தேசிய பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டு, பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து மூன்று மாத காலத்துள் எதிராளி எவ்விதமான ஆட்சேபனையும் தெரிவிக்காவிடில் இப்பின்னுறுதித் தீர்வை முற்றான தீர்வையாக்கப்படும்.

2007 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 11 ஆம் திகதி

வரைந்தது
*சபா ரவீந்திரன்*
வழக்காளியின் சட்டத்தரணி

*இ.த.விக்னராசா*
மாவட்ட நீதிபதி
யாழ்ப்பாணம்.

நீதிமன்றின் கட்டளைப்படி
*து.சிறீமோகன்*
பதிவாளர்
மாவட்ட நீதிமன்றம்
யாழ்ப்பாணம். (c-205)


# J/Kopay Christian College Kopay

# Prize Day-2007

Venue :-125th Anniversary Auditorium.
J/Kopay Christian College
On 07.07.2007, Saturday
at 10.00 a.m

President :-MR.ARUNASALAM AHILADAS
M.ED. SLPS I

Chief Guests :-DR.THAMBIAIAH KALAMANI
EdD, Wollongong. Australia.
Senior Lecturer Dept. of Education.
University of Jaffna.
AND
MRS.QUEEN JESEELY KALAMANI
B.A.Dip. in. Ed.
(Teacher, Thevaraiyali Hindu College Karaveddy)

Speech of Blessings :-Rev.EN.N.Croos O.M.I
BRAMMASHRI P.SHANMUGARAJA KURUKKAL.

Speech of distinguished Guests:- MR.Y.RAVEENDRAN.
Deputy Director of Education(E.D)
Zonal Education office Jaffna.
MR.R.SIVAGNANASUNDARAM.
Divisional Education officer.
Kopay Division
Jaffna Zone.

"Your Presence and Blessings Will Motivate Us."

Principal, Teachers, Students, Old Students Union, School Development Society.
[J/Kopay Christian College]

(c-207)



# தரிசனம்

வலம்புரி

# தமிழரின் தாயகக் கோட்பாடு

## வடக்கு கிழக்கு -தமிழர் தாயகம்

பேராசிரியர்சி. க. சிற்றம்பலம்

இலங்கை வரலாறு மிக அண்மைக் காலம் வரையும் மகாவம்சம் போன்ற பௌத்த நூல்களை மையமாக வைத்து எழுதப்பட்டு வந்தது. இந்நூலில் இரண்டு விடயங்கள் முக்கிய இடத்தைப் பெற்றன. அதில் ஒன்று. இந்நாட்டிற்கு முதன் முதலில் வந்து குடியேறியவர்கள் சிங்கள மக்கள் என்றும் அவர்கள் பௌத்த மதத்தைத் தழுவிய தன்மையில்,



இனம், மதம், நாடு என்ற மூன்றும் இணைந்துபௌத்த சிங்கள நாடு என்ற கருத்தோட்டம் நாள டைவில் வளர்ச்சி பெற்றது.

இதன் தாக்கம் பிரித்தானியாவுக் கெதிரான தேசியப் போராட்டத்திலும் காணப்பட்டது. சிங்கள பௌத்த கலாசாரம் போராட்டத்தில் கூடிய பங்கு வகித்தமையால், ஏனைய சமூகங்களின் அபிலாஷைகளையும் பிரதிபலிக்கும் ஒரு தேசியப் போராட்டமாக மூழுமை பெறவில்லை.

முழுமைபெறாத இந்நிலையில், இலங்கைக்கு சுதந்திரம் வழங்கப்பட்டது. இதன் விளைவாக மேலோட்டமாக ஒரே நாடுஎன்று கூறப்பட்டாலும்எல்லோரையும் பங்காளிகளாக்கும் தேசிய இணக்கப்பாட்டை ஏற்படுத்தும் அளவிற்கு சுதந்திரம் பெற்ற பொழுது உருவாக்கப்பட்ட அரசியல் யாப்பு அமையவில்லை.

மாறாக பெரும்பான்மை இனத்தின் அபிலாஷைகளை நிறைவேற்றும் சட்டங்களே 1972களிலும் 1977களிலும் உருவாகின. இலங்கை அரசியல் யாப்பில் பேசப்படும் ஒற்றையாட்சி என்ற பதம் ஆங்கிலேயரிடமிருந்து கடன் பெற்றதாகும்.

வரலாற்று ரீதியாக பிராந்திய அரசுகளாகக் காணப்பட்ட ஆட்சிமுறையை வலுக்கட்டாயமாக ஒற்றையாட்சி நிர்வாகக் கட்டமைப்பிற்கு ஆங்கிலேயர் மாற்றினர். இதனைத் தமக்குச் சாதகமாக்கிக் கொண்டு பெரும்பான்மை மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றும் களமாக பாராளுமன்றம் செயற்படலாயிற்று. இந்நிலையை மாற்றுவதற்காக தமிழர் மத்தியில் காத்திரமான பிரதி நிதித்துவத்தைப் பெறுவதன் மூலம் சிறுபான்மையினமக்கள் தமது அபிலாஷைகளை பூர்த்தி செய்யலாம் என்ற கருத்தியல் 1930,1940களில் மேலோங்கியது.

எனினும் இது செயலாக்கம் பெறத் தவறியபோது ஒற்றையாட்சிக்கு மாற்றுத் திட்டமாக சமஷ்டி பற்றிய கருத்தோட்டம் தமிழர் மத்தியில் மேலோங்கியது. இதன் அடிப்படை, மொழி வழியாக அமைக்கப்படும்மாநிலசுயாட்சிமுறையில் தங்களின்நிர்வாகத்தைதாங்களே செயற்படுத்துவதற்கான வாய்ப்பு இருந்தது.

இங்கு மாநிலம் என்பது பாரம்பரியமான பல நூற்றாண்டுகளாக தொடர்ச்சியாக உள்ள நிலப்பரப்பில் வரலாற்றுக் காலம்தொடக்கம்வாழ்ந்து வந்தமை, தனித்துவமான மொழி, கலாசாரம், பொருளாதாரக் கட்டமைப்பு ஆகியவையும் இந்த மாநிலத்தில் வாழும் தேசிய இனத்திற்கு தனித்துவத்தை அளித்தது. சமஷ்டிக் கோரிக்கை தமிழர் மத்தியில் வலுப்பெற்றபோது 'தாயகக் கோட்பாடு' ஓர் அரசியல் கோட்பாடாக ஒற்றையாட்சிக்கு மாற்றீடாக தங்களின் தனித்துவத்தைப் பேணும் அதேநேரம், அரசியல் அபிலாஷைகளை மாநிலத்தில் மட்டுமன்றி, மத்தியிலும் அடைய முடியும் என்ற ஓர் அரசியல் சிந்தனையாக இது வளர்ச்சிபெற்றது.

இதில் இன்னோர் திருப்பம், பழைய பாளி நூல்களில் இந்த நாடு சிங்கள மக்களுக்குரியது. அவர்கள்தான் முதல் வந்து குடியேறிய மூத்தகுடிகள் என்ற சித்தாந்தம் வளர்ச்சி பெற்றமையால் தமிழரும் தங்களுடைய தாயகத்தின் வரலாறு-பூர்வீகம் பற்றிச் சிந்தித்தனர்.

இலங்கையில் கடந்த 25 ஆண்டுகளுக்கு மேலாக இடம்பெற்ற அகழ்வாராய்ச்சியின் மூலம் கிடைத்த சான்றுகள் இலங்கையில் ஆரம்பகாலம்தொடக்கம் ஒன்றுக்கு மேற்பட்ட தேசிய இனங்கள் குறிப்பாக சிங்கள, தமிழ் இனங்கள் வாழ்ந்த- வாழுகின்ற நாடு என்பதனை உறுதி செய்துள்ளன.

அதிலும் வடக்குக் கிழக்கு மாகாணங்கள் தமிழர்களின் மொழித் தனித்துவத்தையும், கலாசார தனித்துவத்தையும் மையமாகக் கொண்டே ஆங்கிலேயரால் உருவாக்கப்பட்டன என்பதை ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் நடத்தப்பட்ட குடிசன மதிப்பீட்டறிக்கை துலாம்பரப்படுத்துவதுடன், டச்சுக் காலத் தேசாதிபதிகளின் அறிக்கைகளும் அதனை உறுதி செய்கின்றன. இவர்கள் தமிழ் மக்களை வடகிழக்கில் வாழும் தனித் தேசிய இனமாக இனங்கண்டனர்.

சுதந்திரத்திற்கு முன்னும், சுதந்திரத்திற்குப் பின்னும் தமிழ் மக்களின் பூர்வீகத்தாயகம் வடக்குக் கிழக்கு என்பதை தென் னிலங்கை அங்கீகரித்திருந்தது. 1927ஆம்ஆண்டு கண்டியர் இலங்கை

## வடக்கின் கருத்து

மூன்று கூறுகளாகப் பிரிக்கப்பட வேண்டும் என்ற கருத்தை டொனமூர் கமிஷன் முன் சமர்ப்பித்தனர். அவையாவன,

1. மலையகம் 2. வடக்குக் கிழக்கு இணைந்த தமிழர் தாயகம் 3. தென் மாகாணம், மேற்கு மாகாணம்.

இதனடிப்படை இம் மூன்று பிரிவினரும் தனித்துவமுடையவர்கள் என்பதாகும். தங்கள் பிரதேசத்தை தாயகமாகக் கொண்டவர்கள் இவர்களேயாவர். வடக்குக் கிழக்கு தமிழர் தாயகம் மட்டுமன்றி அவர்கள் தங்களின் தலைவிதியைத் தீர்மானிக்கும் உரித்துடையவர்கள் என கம்யூனிஸ் கட்சியின் சார்பாக திருவாளர்கள் பீற்றர் கெனமனும், வைத்திலிங்கமும் ஒப்பமிட்டு இலங்கை தேசிய காங்கிரஸுக்கு ஒரு மனுவை 1944இல் அனுப்பிவைத்திருந்தனர்.

இதனடிப்படையிலேயே பண்டா - செல்வா ஒப்பந்தம், டட்லி - செல்வா ஒப்பந்தம் மற்றும் இலங்கை- இந்திய ஒப்பந்தம் ஆகியன உருவாகின. இலங்கை- இந் திய ஒப்பந்தம் வரலாற்று ரீதியாக வடக்கு கிழக்கு தமிழரின் மரபுவழித் தாயகம் என ஏற்றுக்கொண்டது. குடியேற்றம் பற்றி டட்லி -செல்வா ஒப்பந்தத்தில் காணப்படும் சரத்துக்கள் தமிழரின் தாயகக் கோட்பாட்டுக்கு வலுவூட்டுவதாக அமைந்துள் ளது. அவையாவன,

1) குடியேற்றத்தில் குறிப்பிட்ட தமிழ் மாவட்டத்திலுள்ளவருக்கே முன்னுரிமை.

2) வட-கிழக்கிலுள்ள தமிழ் பேசும் மக்களுக்கு முன்னுரிமை.

3) வட-கிழக்குக்கு வெளியில் வாழும் தமிழருக்கு முன்னுரிமை. டட்லி-செல்வா ஒப்பந்தம்மற்றும் இலங்கை - இந்திய ஒப்பந்தம் ஆகியன வரலாற்று ரீதியாக வடக்குக் கிழக்கு, தமிழரின் மரபுவழித் தாயகமென ஏற்றுக்கொண்டுள்ளன.

## வடக்கு கிழக்கு மாகாணங்கள் தமிழர் தாயகப் பிரதேசமே

பேராசிரியர் கா. குகபாலன்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

இலங்கையில் வாழ்ந்துவரும் இரு பெரும் இனத்தவர்களான சிங்களவர்களும், தமிழர்களும் காலத்தால் முந்தியவர்கள். இவர்கள் இந்தியாவிலிருந்து புலம்பெயர்ந்து இலங்கைக்கு வந்தார்கள் என்பது வரலாற்றறிஞர்களின் ஒத்த கருத்தாகும்.

ஆனால் அவர்களது வருகைக் காலம் பற்றி தெரிவிக்கப்படும் கருத்துக்கள் முரண்பாடானதாக உள்ளபோதும்,



இந்நாட்டில் வாழ்கின்ற தமிழர்களின் பாரம்பரிய பிரதேசமாக தற்போதைய வடக்கு -கிழக்குப் பிரதேசம் விளங்குகின்றது என்பதில் எவருக்கும் ஐயம் இருக்க நியாயமில்லை.

ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் 1833ஆம் ஆண்டு நிர்வாகத்தினை சுலபமாக்கும் பொருட்டு நாட்டை 5 மாகாணங்களாகப் பிரித்தனர்.

மேற்கு, கிழக்கு, வடக்கு, தெற்கு மற்றும் மத்தி என்பனவே அவையாகும். இம் மாகாணங்களில் வடக்கு மாகாணம் இன்றைய யாழ்ப்பாணம், மன்னார், வன்னி உட்பட 'நுவரகலாவிய' பிரதேசத்தை இணைத்தும், கிழக்கு மாகாணத்தின் இன்றைய கிழக்கு மாகாணத்துடன் 'தமன்கடுவ' பிரதேசத்தையும் இணைத்து உருவாக்கப்பட்டது. ஆங்கிலேய அரசு மாகாணங்களை அதிகரிக்கும் செயற்பாட்டின் ஓர் அம்சமாக 1873ஆம் ஆண்டு வட மத்திய மாகாணம் உருவாக்கப்பட்ட வேளை, தமிழர் பாரம்பரியப் பிரதேசத்தினையும் அவர்கள் வாழ்வியலையும் கருத்தில் கொண்டு 'நுவரகலாவையும்' 'தமன்கடுவவையும்' பிரித்து வட மத்திய மாகாணம் உருவாக்கப்பட்டது.

இந்நிலையில் ஆங்கிலேயர் ஆட்சியில் தமிழர் அதிகமாக வாழும் பிரதேசங்களை ஒன்றிணைத்துள்ளனர் என்பதிலிருந்து இப்பிரதேசம் தமிழரின் பாரம்பரியப் பிரதேசம் என்பதை அடையாளம் காணமுடிகின்றது.

மேலும் குடித்தொகை அடிப்படையில் நோக்கும்போது 1871ஆம் ஆண்டு குடித்தொகை கணிப்புத் தரவுகளின் பிரகாரம் யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களில் தமிழ்பேசும் மக்களின் பரம்பலானது முறையே 99.6%, 98.6%, 89.0%, 93.3%, 90.8%வீதத்தினராக வாழ்ந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆனால் இலங்கையின் சுதந்திரத்தின் பின்பு இத்தகைய பண்பில் தொடர்ச்சியாக மாற்றம் அடைந்து வருவதைக் காணமுடிகின்றது.

குடியானவர் குடியேற்றத் திட்டங்கள் மற்றும் அபிவிருத்தித்திட்டங்கள் போன்றன ஒரு புறமாகவும், வடக்கு கிழக்கில் நிகழ்ந்துவரும் யுத்த நிலைமைகளால் தூண்டப்பட்ட இப்பெயர்வு மற்றும் அதிகரித்த இறப்புக்களின் விளைவு மறுபுறமாகவும், தமிழ்பேசும் மக்களின் குடித்தொகை பரம்பல் கோலங்களில் தொடர்ச்சியான மாற்றங்கள் ஏற்பட்டு வருவதைக் காணமுடிகின்றது. இத்தகைய நிலை தொடருமாயின் தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசத்திற்கான அடையாளத்தை இழக்க வேண்டியது தவிர்க்க முடியததாகிவிடும்.


## சிறுபான்மை இனத்தை அழித்து பெரும்பான்மை இனம் வாழ முடியாது

சிவஸ்ரீ. கு. தியாகராஜக்குருக்கள் (நீர்வைமணி)

மக்களுடைய வாழ்விற்கும், வளத்திற்கும், அவர்களுடைய மன எண்ணங்கள், செயற்பாடுகளுக்கும் இந்த நிலமே தான் வழிகாட்டியாகவுள்ளது. இதனையே ஒருவரைப் பார்த்து அவர் குறைகளைப் பற்றிக் கூறும்போது அது அவரது மண்வாசி என்கிறோம்.

இந்தவகையில் இன்று சர்வதேசத்தினதும் கவனத்தை ஈர்த்துள்ள இலங்கைத் தமிழர் தாயகமான தமிழீழ மண்ணைப் பற்றியும், அந்த மண்ணுக்காக இந்த நாட்டில் நடைபெறும் போராட்டம் பற்றியும் உலக நாடுகள் கொண்டுள்ள அக்கறை பலகோணங்களில் சிந்தனைக்கு உரியதாகவுள்ளது.

இலங்கையின் வரலாற்றிற் பல நூற்றாண்டுகளாகவே தமிழ் மக்களும், சிங்கள மக்களும் தத்தமக்கெனச் சிறந்த பண்பாடு, கலாசாரங்களுடன் கூடிய ஆட்சி அதிகாரங்களுடன் வாழ்ந்து வந்துள்ளனர். ஐரோப்பியர் இலங்கை மீது படை எடுத்து வந்தபோது தமிழர் தாயகப் பிரதேசத்தையும், சிங்களவர் தாயகப் பிரதேசங்களையும் வேறுவேறாகவே போரிட்டுக் கைப்பற்றினர்.



ஆனால் இந்நாட்டை ஆளவந்த ஆங்கிலேய பிரிட்டிஷார் தான் தமது ஆட்சி வசதி கருதி இலங்கையை ஒரே நாடாக்கினார்கள். அவர்கள் செய்த இரு இன, இரு மொழி பேசும் மக்களின் அடிப்படைப் பண்பாடு, கலாசார, மண் வழிப் பாரம்பரிய நசுக்குதலே இன்றைய இலங்கை இனப்பிரச்சினைக்கு மூல காரணமாயுள்ளது.

இலங்கையின் வரலாற்றை புரட்டிப் பார்ப்போமானால் காலத்தால் நிர்ணயிக்கக்கூடிய போதிய வரலாற்றுச் சான்றுகள் இல்லாது இலக்கியங்களைக் கொண்டே அறிய வேண்டியதாயுள்ளது. அத்துடன் பழைய கல்வெட்டுக்களும், புதைபொருட்களும் இலங்கையில் தமிழரின் தொன்மையை எடுத்துக் காட்டுவனவாயுள்ளன. இலங்கையின் வடக்கும், கிழக்கும் தமிழர் தாயகப் பிரதேசங்கள் என்பதையும் ஒரு தனி இன மொழி கொண்ட பிரதேசமானது பொதுப் பண்பாடும், பொருளாதாரமும், பொது வாழ்வியலும், கலாசாரமும் கொண்டிருக்குமாயின் அது ஒரு நாடாகக் கொள்ளலாம் என்பதும் ஆன்றோர் முடிவு.

ஈழத் தமிழர் தாயகமும் தனக்கெனத் தனியான நிலப் பிரதேசத்தைக் கொண்டதாகவும் மொழி, பண்பாடு, கலாசாரங்களால் தனித்துவம் கொண்டதாகவும் பல நூற்றாண்டுகளாகவே விளங்கி வருகின்றது. கி.பி.2, 3 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாக கண்டெடுக்கப்பட்ட கல் வெட்டுக்கள் இலங்கையிற் தமிழர்கள் வாழ்ந்ததை உறுதிப்படுத்துவனவாயுள்ளன. அன்றியும் கி.மு. 961 இல் தமிழ் மன்னன் எல்லாளன் அனுராதபுரத்தைத் தலைநகராகக் கொண்டு இலங்கை முழுவதையும் ஆட்சிசெய்ததாகவும், சிங்களச் சிற்றரசன் துட்டகைமுனு எல்லாளனை வென்றதையும் வரலாறுகள் எடுத்துக்கூறுகின்றன.

இதனை எந்த ஒரு இலங்கை அரசும் மறுத்ததாகவில்லை. இது இலங்கையில் தமிழருக்கும் பிரதேசம் இருந்ததை ஏற்றுக்கொண்டதாகவே உள்ளது. போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆட்சிக் காலங்களிலெல்லாம் தமிழரும் இலங்கையில் குறிப்பிட்ட பிரதேசங்களில் வாழ்ந்ததையும், அவர்கட்கு எனத் தனித்துவமான கலாசார, பண்பாடுகள் இருந்து வந்ததையும் யாரும் மறுதலிப்பதாயில்லை.

இருந்தும் அரசியலிற் பேரினவாதம் தலையெடுத்தாலும் அதனாற் சிறுபான்மை இனம் பல்வேறு நசுக்குதல்களுக்கும், அழிப்புகளுக்கும், துன்பங்களுக்கும் முகம் கொடுக்க வேண்டி வந்ததனாலுமே இன்று இந் நாட்டின் எதிர்காலம் இருள் சூழ்ந்துவிடும் நிலைக்குள்ளாகியுள்ளது.

ஆட்சியாளர்களுக்கும், அவர்களது ஆலோசகர்களுக்கும் இந்நாடு எதிர்காலத்தில் நல்ல சுபீட்சத்துடனே திகழ வேண்டும் எனும் நல் எண்ணம் உருவானால் தான் அவர்கள் சிறுபான்மை மக்களை நன்நோக்குடன் அரவணைத்து நாட்டையும், மக்களையும் வளம் பெறச் செய்ய முடியும்.

சிறுபான்மையினத்தை அழித்தொழித்து பெரும்பான்மை இனம் சுபீட்சமுடன் நிலைத்து வாழ்ந்ததாகச் சரித்திரமே இல்லை. எனவே இந்நாடு சுபீட்சமாய் நிலையான நல்வளம் பெற்றிட தமிழர் தாயகத்தை ஏற்று சிறுபான்மை மக்கள் உரிமைகளையும் உள்ளன்போடுபகிர்ந்தளிக்க வேண்டும்.

## இலங்கை என்ற விரிபரப்பில் வாழ சிங்களத்தலைமைகள் விடவில்லை

ஆ. சபாரத்தினம்

(தத்துவவியல் ஆசிரியர்)

'தமிழர் தாயகம்' என்ற எண்ணக் கருவை தமிழ் மக்கள் ஆரம்ப காலங்களில் தம் மன இருப்புகளில் வைத்திருக்கவில்லை.

இலங்கை என்ற நாட்டில் விரிபரப்புடன் இணைந்து - ஒன்றித்து வாழ்வதையே அவர்கள் விரும்பினர்.

அந்த விருப்பத்திற்குள் தமிழர் தாயகத்தை அவர்கள் சுட்டி நிற்கவில்லை. ஆனால் சிங்கள ஆட்சியாளர்கள் தமிழ் மக்களை தமது எதிரிகளாகவே கருதினர்.

தமிழர்கள் இலங்கையில் இருப்பது இலங்கையை கூறுபோட்டு விடும் எனப் பயந்தனர். இந்தப்பயம் சிங்களத் தலைமைகளிடம் இயல்பாக ஏற்பட்டதாகும்.




தமிழர்களின் பூர்வீகம் தமிழகம் எனவும் அவர்கள் தம்மை அடையாளப்படுத்துவதற்கு தமிழ்நாடு இருப்பதனால் இலங்கையை பௌத்த சிங்கள நாடாக ஆக்க வேண்டும் எனவும் சிங்களத் தலைமைகள் விரும்பின.

இதன் ஏற்பாடாக முதலில் வரலாற்று திரிபுகள் திட்டமிட்டு ஏற்படுத்தப்பட்டன. இலங்கையின் ஆதிக் குடிகள் சிங்கள மக்களே என்ற பதிவுகளை வெளியிட்டதுடன் தமிழ் மக்களின் வருகை, அவர்களின் இருப்பு, வாழ்விடம் தொடர்பில் வரலாற்று உண்மைகள் மறைக்கப்பட்டு திரிபுபடுத்தப்பட்டும் வெளிப்படுத்தப்பட்டன.

## சந்திப்பு:- என். விஜயசுந்தரம்

இலங்கை என்ற நாட்டில் ஒற்றுமையாக வாழமுடியும் என்ற நினைப்பில் இருந்த தமிழ் மக்கள் -தமிழ் தலைமைகள், சிங்களத்தலைமைகளின் திட்டத்தை புரிந்துகொள்வதற்கு கணிசமான காலமெடுத்ததென்றே கூறவேண்டும்.

(6ஆம் பக்கம் பார்க்க)



# தரிசனம்

11 ராவய

# தமிழரின் தாயகக் கோட்பாடு

## தெற்கின் கருத்து

### சிங்கள தாய்நாடு தமிழர் தாயகமாகும்

**கலாநிதி நவரத்ன பண்டார**

என்னுடையது என்று சில வற்றை வரையறுத்துக் கொள்வது மனிதனின் குணவியல்புகளில் ஒன்றாகும். நாய்களிடமும் இந்த குணாதியசம் உண்டு.



காலம் காலமாக மக்கள் ஓரிடத்தில் தொடர்ந்து வசிக்கும் போது அவர்களுக்கேயுரித்தான சமூக மற்றும் கலாசார அடையாளங்கள் அவ்விடங்களில் வளர்ச்சி பெறுவது பொதுவான அம்சமாகும். இவர்களில் எவரும் வேறு எங்கிருந்தோ வந்தவர்கள் அல்லர்.

ஆனால் இன்று குறுகிய அரசியல் தேவைகள் காரணமாகவே வாழ்விட கோட்பாடுகள் முன்வைக்கப்படுகின்றன. இது நவீன காலத்தின் கேட்பாடுகளாகும். முன்னர் அரசர்களு டன் அரசருக்கு சொந்தமான பிரதேசத்தில் வாழ்ந்த மக்கள் அந்த பிரதேசங்களின் உரிமைக்காக குரல் கொடுக்கவில்லை. ஆனால் பிற்பட்ட காலங்களில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்கள் காரணமாக தாயகம், தாய்நாடு ஆகிய கருத்து நிலைகள் தோற்றம் பெற்றன.

அது நவீன தேசியவாதத்தின் ஒரு அம்சமாகும். தேசிய வாதத்தை எல்லைப்படுத்தும் உச்ச நிலையினை அடையும்போது தமது நிலப் பிரதேசத்தை வரையறுத்து சுய நிர்ணய உரிமையைக் கோருவதும் அதன் ஒரு பகுதியாக அமைகின்றது.

அது தமது அடையாளத்தைப் பேணிக் கொள்ளுதலாகும். நிலத்தின் அமைப்பின் அடிப் படையே சுய நிர்ணய உரிமையின் அடிப்படையாக அமைகின்றது. முதற் கால கட்டத்தில் இந்த பிரச்சினையின் போது இரு பிரதான இனங்கள் குறித்தே கவனம் செலுத்தப் பட்டிருந்தது. ஆனால் தற்போது இன்று இதில் முஸ்லிம் மக்களும் உள்ளடங்குகின்றனர்.

நாம் சிங்களவர்கள் என்ற வகையில் தாய்நாடு கோட்பாட்டினை உள்வாங்கியது போன்றே தமிழர்கள் தாயகக் கோட்பாட்டினை பின்பற்றினர்.


தாய்நாடு சிங்களவர்களுக்கு மட்டும் வரையறுக்கப்படும் போது தமிழ் மக்களுக்கு பாதுகாப்பு அவசியம். அதன் பிரதிபலனே தாயகம் என்ற விடயம். தேசிய அரசு உருவான காலம் முதல் இவ்வாறான கோட்பாடுகள் உள்ளன.

தற்போது முஸ்லிம் மக்களும் கிழக்கு பிராந்தியம் குறித்து உரையாடல்களை நிகழ்த்திக் கொண்டிருக்கின்றனர். இவை புராதன விடயமாக இல்லையா என்பது இங்கு விடயமல்ல. உண்மையான உரிமையாளர்களை தேடுவதும் அவசியமல்ல. இவை அங்கீகரிக்கத் தக்க விடயங்கள் என்பதனை ஏற்றுக்கொள்வதே அவசியமாகவுள்ளது. உண்மையான உரிமையாளர்களை தேடுவதானால் ஆதிவாசிகள் இன்னும் காட்டில் வசித்துக் கொண்டிருக்க மாட்டார்கள் அல்லவா? நாம் உண்மையை விளங்கிக் கொள்வோம்.

### சம உரிமை இல்லாததினால் தாயகம் செல்லுபடியாகும்

**பேராசிரியர் சுச்சரித்த கம்லத்**

தமிழர் தாயகம் என்ற விடயத்தை நான் சிங்களவனாக அல்லாது உலகப் பொது மகனாக இருந்தே நோக்க விரும்புகிறேன். அதற்கு காரணம் நான் உலகத்தின் பிரஜையாக இருப்பதே. தாயகம் என்பது பிறந்த இடம் என்று பிரதானமாக நாம் விளங்கிக் கொள்ளவேண்டும். அதன்படி இது தமிழ் மக்களின் பிறப்பிடம் என்பதனை நாம் விளங்கிக்கொள்ள வேண்டும். ஒரு இனப்பிரிவு ஒரு குறிப்பிட்ட இடத்தில் நிரந்தரமாக வசித்து வருகின்றதாயின், அவர்களுக்கென மொழி இருக்குமாயின், அவர்களுக்கென தனியான கலாசார அடையாளங்கள் இருக்குமாயின் அவர்களுக்கு அந்த பிரதேசத்தின் உரிமை கிடைத்து விடுகின்றது.



நான் இங்கு ஒரு நபரைப் பற்றி பேசவில்லை. மக்களைப் பற்றியே பேசுகின்றேன். முதலில் நான் குறிப்பிட்ட இயல்புகள் இந்த மக்களுக்கு உண்டு. அது மட்டுமன்றி அவர்களுக்கென ஒன்றுபட்ட பொருளாதாரக் கட்டமைப்பும் உண்டு. இந்த விவகாரத்தை நாம் அரசியல் கோட்பாட்டின் அடிப்படையிலேயே கலந்துரையாட நேர்ந்துள்ளது.

இந்நாட்டில் வாழும் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் அனைவருக்கும் சம உரிமை இருக்குமாயின் எவருக்கும் தனிப்பகுதிகள் தேவைப்படாது.


ஆனால் இங்கு அவ்வா றான நடைமுறைகள் எதுவுமே இல்லாததன் காரணமாக அவர்களுக்கு அப்பிரதேசங்கள் சொந்தமானவை என்பதனை நாம் நேர்மைத் தன்மையுடன் விளங்கிக் கொள்ள வேண்டியுள்ளது.

உண்மையில் அது அவர்களின் பிரதேசம்.

### பாதுகாப்புக்கே அடையாளம் தேவை

**பேராசிரியர்எஸ்.டீ.ஹெட்டிகே**

இந்தப்பிரச்சினை எமக்கும்



இலங்கைக்கும் மட்டுமே உரித்தான பிரச்சினை இல்லை. சிங்களவர்கள் என்ற வகையில் நாம் இந்த நாட்டை தாய்நாடு என்கின்றோம். ஏன் நாம் தாய்நாடு என்று கூறு கின்றோம். அதன் எளியவிளக்கம், எமக்கு செல்வதற்கு வேறிடம் இல்லை என்பதாகும்.

குறிப்பாக இங்கு பாதுகாப்பு பற்றிய பிரச்சினையே உள்ளது. எமக்கென தங்கியிருக்கவும் பாதுகாப்பாக இருக்கவும் நிரந்தரமான ஓரிடம் அவசியம். நாம் எங்கு சென்றாலும் ஓர் குறிப்பிட்ட இடத்திற்கு வந்து சேர்கின் றோம்.

அதுவே எமக்கு பாதுகாப்பான இடம். யாருக்கும் அடிபணியாமல் இருக்கக்கூடிய இடம். மனிதனின் அடிப்படை விடயமே தனிப்பட்ட பாதுகாப்பு தொடர்பான உணர்வாகும். நாம் எங்கு சென்றாலும் இறுதியில் வீட்டுக்கு வருகின்றோம். எமக்கு தெரியும் அதுவே பாதுகாப்பான இடம் என்று. அவ்வாறாயின் காலம் காலமாக இருந்து வரும் தமிழ் மக்கள் தமது பாதுகாப்பான வசிப்பிடத்திற்கென தெரிவு செய்யும் நிலப்பிரதேசத்தை அவர்களே நிர்வகிப்பதையும் அவர்களுக் குரித்தாக்கிக் கொள்வதையும் விவாதிக்க வேண்டுமா? இது பற்றி நாம் விரும்பிய வகையில் வாத விவாதங்களில் ஈடுபடலாம்.

ஆனால் சற்று யோசித்துப் பார்த்தால் அந்த மக்களுக்குரிய பாதுகாப்பை சவாலுக்குட்படுத்த எம்மால் முடியுமா? அந்த பாதுகாப்பை வழங்க எம்மால் இயலுமா? கொழும்பில் வசிக்கும் மக்கள் புத்தாண்டுக்கு தமது பிரதேசங்களை நோக்கி செல்கின்றனர். பிறந்த ஊருக்கு செல்கின்றனர். ஏனெனில் காலம்காலமாக எம் மத்தியில் ஊடுருவி வந்த விடயத்தை கைவிட முடியாது என்பதே அதன் காரணமாகும்.

ஆனால் நாம் அவர்களுக் குரிய நிலப்பிரதேசத்தை கைவிடுமாறு தமிழ் மக்களுக்கு பணிப்புரை விடுக்கின்றோம். எல்லா மனிதர்களுக்கும் ஆரம்ப வேர் ஒன்று அவசியம்.


அந்த ஆரம்பம் இன்றி அடையாளம் தனித்துவம் எதுவுமே இல்லை. தமிழ் மக்களுக்கு வேர் தாயகமாகும் . அதுவே அவர்களின் அடையாளம் என்றே நான் நம்புகின்றேன்.

### தாயகத்தை உறுதிப்படுத்தியாயிற்று

**பேராசிரியர் ஜயதேவ உயங்கொட**

எனக்கு இவ்விடயம் பற்றி தனிப்பட்ட நிலைப்பாடுகள் எதுவுமே இல்லை. தாயகக் கோட்பாடு என்பது தமிழ்தேசியவாத நிலைப்பாடாகும். எம்மில் பலர் இதனை ஏற்கக்கூடிய நீதியான விடயமல்ல என்று தர்க்கித்தாலும் அவர்களே இதனை ஏற்கக்கூடிய சாதாரண விடயமாக ஏற்றுக்கொண்டுள்ளனர். இதுவே உண்மையுமாகும்.

83ஜூலை கலவரத்தின் போதும் அண்மையில் விடுதிகளில் தங்கியிருந்த மக்கள் வடக்கிற்கு பலவந்தமாக அனுப்பி வைக்கப்பட்ட விடயத்தின் போதும் தமிழ் மக்களுக்கு



இருக்கும் பாதுகாப்பு மற்றும் உரிமை தமிழர் தாயகமே என்பதனை எமது ஆட்சித்தரப்பினர் ஏற்றுக் கொண்டுவிட்டனர்.

எமது நிலைப்பாட்டினை நிராகரிக் கும் அரசியல் வாதிகளும், அரசியற் கட்சிகளும் மற்றும் குழுக்களும் அவ்விடயத்தை உறுதிப்படுத்தும் வகையிலேயே மீண்டும் மீண்டும் செயற்பட்டுள்ளனர். அவ்வாறாயின் இவ்விடயம் குறித்து எனக்குள்ள நிலைப்பாடு என்ன? இது பற்றி எனக்கு எந்த நிலைப்பாடும் இல்லை.

### புதிய விளக்கங்கள் அவசியம்

**சுசில் சிறிவர்தன**

தமிழர் தாயகம் என்ற கோட்பாட்டை நாம் நீக்கவேண்டும். இந்த கோட்பாடு நாம் ஒன்றிணைவதற்கு தடைகளை உருவாக்க காரணமாகவுள்ளது. அதிலிருக்கும் உணர்ச்சிகள் அரசியல் தேவை



மட்டுமேயன்றி வேறில்லை. தேசிய அரசு என்ற கோட்பாட்டினை புதுப்பிக்க காலம் கனிந்துள்ளது. மேற்கத்தேய அர சியல் நிபுணர்கள் சம இன அரசு என்ற விடயத்தையே பயன்படுத்துகின்றனர்.

இந்தியாவின் நிலைமை அதனை விட முற்றிலும் மாறுபட்டது. ஏனெனில் அங்கு பல்லின மக்கள் வாழ்கின்றனர். எமக்கும் அவ்வாறான பாதையே அவசியம். பல்லின மக்கள் மத்தியில் பழிவாங்கும் உணர்வுகள் அற்ற கோட்பாட்டினையே நாம் உருவாக்க வேண்டும்.

மக்களின் ஒத்துழைப்பின்றி சிறு பகுதியினரால் பல விடயங்கள் கட்டியெழுப்பப்பட்டதினாலேயே இன்று தாயகம் தாய்நாடு என்ற கோட்பாடுகளில் சிக்குப்பட நேர்ந்துள்ளது.

இவை அனைத்தும் திணிக்கப்படும் விடயங்களாகும். சிறு தரப்பினரால் உருவாக்கப்படும் விடயங்கள்.

இந்த நிலையிலிருந்து மீளாமால் எம்மால் இந்தப் பிரச்சினையை வெற்றி கொள்ள முடியாது. ஏனெனில் சில அதனை நன்கு என்று கூறுகின்றனர். சிலர் மீண்டும் சரியல்ல என்று கூறுகின்றனர். சிலர் மீண்டும் சரியல்ல என்கின்றனர். அரசியல் குத்துக்கரணம் இட்டவுடன் நன்று என்று கூறியவர்கள் பின்பு சரியல்ல என்கின்றனர்.


அதனால் கோட்பாட்டு ரீதியில் இவ்விடயத்தை நிராகரிக்க வேண்டும்.

### தமிழ் மக்களினால் வளமாக்கப்பட்ட பிரதேசம்

**சுசிலா தொடங்கொட**


'தாயகம்' என்ற சொல் வசீகரமாக இருந்தாலும் அது வளமான பிரதேசமல்ல. அதனை வளமான பிரதேசமாக்கி அப்பிரதேசங்களைப் பற்றி பேச வைத்தது தமிழ் மக்களே. அதனை நாம் ஏற்றுக் கொள்ளவேண்டும்.

நாம் கடினமான பணிகளில் கை வைக்கவில்லை. அவர்களே துன்புற்று பல சிக்கல்களின் மத்தி



யில் அப்பிரதேசங்களை கட்டியெழுப்பினர். அதனாலேயே இன்று நாம் அதனைப்பற்றி பேசக் கூடியதாகவுள்ளது. அவ்வாறு மிகவும் முயற்சியுள்ள மக்களுக்கு அறுவடையை மேற்கொள்ளவும்,

(5ஆம் பக்கம் பார்க்க)



# தரிசனம்

ராவய

# பிளவுபடும் தென்னிலங்கை கட்சிகளும் தேசிய இனப்பிரச்சினையும்

தேசியப் பிரச்சினைக்கு தீர்வு காணும் விடயத்தில் தெற்கில் நிலவும் கட்சிகளின் பலதரப்பட்ட பிளவு நிலைகள் செல்வாக்கு செலுத்துவதில்லை. நேர்மை தன்மையுடன் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையிலான அதி காரப் பரவலாக்கல் தீர்வு திட்டத்தினை ஜனாதிபதி முன் வைத்தலே இன்றைய சூழ்நிலையில் அவசியமானது. அவ்வாறான நடவடிக்கையின் போது இன்று நிலவும் அரசியல் பிளவு நிலைகள் செல்வாக்கு செலுத்தப் போவதில்லை.

அவர் முற்போக்கு தன் மையுடனான நடவடிக்கை ஒன்றை எடுப்பாராயின் பல கட்சிகளின் ஆதரவினைப் பெற்றுக் கொள்ளக்கூடிய வாய்ப்பு அவருக்கு உண்டு. ஐக்கிய தேசியக் கட்சியும் தமிழ் கட்சிகளும் இவ் விடயத்தில் ஒத்துழைப்புடன் செயற்படும் என்றே கூறமுடியும்.



ஏனெனில் இனப் பிரச்சினைக்கு தீர்வுகாண இது அனைவருக்கும் அவசியமாகவுள்ள காலகட்டமாகும். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினால் முன்வைக்கப்பட்ட தீர்வு யோசனைகளின் மூலம் நான் கூறிய ஆரம்பத்தைப் பெற்றுக் கொள்ள முடியாது. அவசியமான தீர்வுத் திட்டம் எது என்பதை ஜனாதிபதி அறிந்திருந்தாலும் இனவாதம் என்ற சேற்றுக் குழிக்குள் இருந்து அவர் மீண்டு வர விரும் பாததினால் தேவையான நடவடிக்கைகளை அவர் மேற் கொள்வார் என்று கருதிக் கொள்ள முடியாது.

## தெற்கின் கருத்து

சிங்கள இனவாத கருத்து நிலைகளைப் பின்பற்றுவதனூடாக இனவாத வாக்குகளை ஜே.வி.பி.மற்றும் சிஹல உறுமய ஆகிய கட்சிகளிடமிருந்து பிரித்தெடுக்கலாம் என்று அவர் கருதுகின் றார்.

ஐக்கிய தேசியக் கட்சியும் இந்த சந்தர்ப்பத்தில் தேசியப் பிரச்சினைக்கு தமது தீர்வுத் திட்டயோசனைகளை இதுவரை சமர்ப்பிக்கவில்லை. முதலில் உங்களது யோசனைகளை சமர்ப்பியுங்கள். பின்பு நாம் அது பற்றி பரிசீலிக்க தயார் என்றே ஐக்கிய தேசியக் கட்சியினர் ஜனாதிபதியிடம் தெரிவிக்கின்றனர்.

தீர்வினை நோக்கி முன்னேறும் எதிர்பார்ப்புடன் ஐக்கிய தேசியக்கட்சி 2002ஆம் ஆண்டு போர் நிறுத்த உடன் படிக்கையை கைச்சாத்திட்டது. ஆனால் சிங்கள இன வாதத்தின் முன்னிலையில் பயன்தரக்கூடிய அதிகாரப் பரவலாக்கல் தீர்வுத் திட்டத்தினை அவர்களினால் முன்வைக்க இயலாமற் போய்விட்டது.

தமிழ் மக்களைப் போன்று சர்வதேசப் பிரஜைகளும் இந்த இனப்பிரச்சினைக்கு சிங்கள ஆட்சியாளர்கள் எவ்வாறான தீர் வினை முன்வைக்கப் போகின்றார்கள் என்பதனை அவதானத்துடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர். சர்வதேசப் பிரஜைகள் தற்போது விடுதலைப்புலிகளைப் பற்றி பேசுவதில்லை. தமிழ் மக்கள் படுகொலைகள் தொடர்பாக சிங்கள அரசாங்கம் முன்வைக்கும் தீர்வு என்ன என்பது மட்டுமே அவர்களுக்கு முக்கியமாகவுள்ளது.

சிங்கள மக்களின் அதிபெரும்பாண்மை பலம் மிக்க அரசாங்கமே தற்போது இலங்கையில் உள்ளது. அதன் அதிகாரம் சிங்களவர்களுக்கு மட்டுமே உரியதாகும். அரசியலமைப்பில் அடிப்படை உரிமைகள் உறுதிப்படுத்தப்படும் என்று கூறினாலும் சிங்களவர்களின் அதிபெரும்பான்மை அரசாங்கத்தில் தமிழ், முஸ்லிம் மக்கள் எப்படி தமது உரிமைகளைப் பாது காத்து கொள்வார்கள் என்பது நடு நிலையாக சிந்திப்பவர்களுக்கு ஏற்படும் கேள்வியாகும். இந்த நிலைமையில் சிறிய இனக் குழுமங்களுக்கு தமது முன்னேற்றம் தொடர்பிலான பணிகளை நிறைவேற்றிக் கொள்ளும் சுதந்திரம் அவசியமாகும்.

தமிழ் மக்களின் தேவைக்கு ஏற்ப தீர்வினை வழங் குவது எப்படி என்பதனை மஹிந்த ராஜபக்ஷ அறிவார். எனினும் அவர் யதார்த்தத்தை நிராகரிக்கின்றார். அதிகாரப் பரவலாக்கல் இன்றி தமிழ் மக்களுக்கு நிறைவான தீர்வினைப் பெற்றுக் கொடுக்க முடியாது. மாவட்ட சபைகளின் ஊடாக அதிகாரப் பரவலாக்கல் அன்றி ஒற்றையாட்சியின் கீழ் மிகசிறிய அளவிலான பரவலாக்கல் மட்டுமே ஏற்படுத்தப்படும். இதனை தமிழ் மக்கள் எந்த வகையிலும் ஏற்கமாட்டார்கள். தமிழ் மக்கள் மீது இந்த தீர்வினை பலவந்தமாக திணிக்க முடியாது. அவ்வாறு பலவந்தமாக திணிப்பதற்கு தமிழ் பிரதேசங்களில் சிங்கள இராணுவத்தை நிறுத்தி வைக்க வேண்டிய அவசியம் எழும்.

தற்போது நாட்டில் தோல்வியடைந்த அரசாங்கத்தின் சிக்கல்கள் அன்றி அரச நெருக்கடியே ஏற்பட்டுள்ளது. அது கட்சிகளுக்கும் நபர்களுக்கும் இடை யிலான தனிப்பட்ட பிரச்சினை யினால் ஏற்பட்ட மாற்றங்கள் மற்றும் தனிக் குழுக்கள் அமைக்கப்பட்டதினால் ஏற் பட்ட பிரச்சி னைகள் அல்ல. நாட்டின் பொறுப்புக் கூறக் கூடிய தலை வர் பிரச் சினைகளை கவனத்திற் கொள்ளாது நிராகரித் ததினால் ஏற்பட்ட சிக்கல்களாகும்.

இந்த சிக்கல்களிலிருந்து மீண்டு வரவே ரணில் போர் நிறுத்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்டார். எனினும் வடக்கிற்கு உள்ளக சுயாட்சி உரிமையை வழங்கினால் ஒரு மாதம் கூட அவராஷ் பதவியில் நீடித்திருக்க முடியாது என்பதனை அவர் நன்கறிந்திருந்தார். வடக்கில் நிலைமை சற்று வேறுபட்டதாகும். விடுதலைப் புலிகள் ஒரு வழியில் செல்லும்போது

**பெற்றி வீரக்கோன்**
**சட்டத்தரணி**

சில தமிழ் கட்சிகள் வேறு வழியில் செல்கின்றன. ஆனந்த சங்கரி போன்றவர்கள் புலிகளின் செயற் திட்டத்திலிருந்து விடுபட்டு செல்ல முயற்சிக்கின்றனர். அவரால் தனித்து அவ்வாறு விடுபட முடியாது . எவ்வாறாயினும் தமிழ் மக்களின் பிளவு நிலையினால் அவர்களுக்கு ஒரு இழப்பு ஏற்படும். அதாவது நீதியான தீர்வினைப் பெற்றுக்கொள்ள வடக்கு கிழக்கு தமிழ் மக்கள் தெற்கின் மீது செலுத்தும் அழுத்தமானது இவ்வாறான பிளவுகள் காரணமாக குறைவடைந்து செல்லும் என்றே கூற முடியும்.

## தமிழரின் தாயகக் கோட்பாடு

*4ஆம் பக்கத் தொடர்ச்சி*

அதற்கு உரிமைகோரவும் பிறரின் அனுமதி தேவையா? அன்று நாம் அப்பிரதேசங்களுக்கு செல்லாமல் , அப்பிரதேசங்களைக் கைவிட்டுவிட்டு ஏன் இப்பொழுது மட்டும் இங்கிருந்து அப்பிரதேசத்தைப்பற்றி இங்கு கூச்சலிட வேண்டும்.

இது மக்களின் பிரச்சினையில்லை. அரசியல் வாதிகள் உருவாக்கும் பிரச்சினை. அங்கு அவர்கள் வசிப்பதில் சாதாரண பொதுமக்களான எமக்கு எந்த விதமான பிரச்சினையும் இல்லை. ஆனால் அரசியல் வாதிகள் அதனை பிரச்சினையாக மாற்றிவிட்டனர்.

நாம் ஒரு தாய் பெற்றெடுத்த குழந்தைகள். அதனையே உலகம் ஏற்கின்றது. உலகின் வெப்பநிலை அதிகரிப்பு காரணமாக பனிமலைகள் உருகி கடல் மட்டம் உயர்ந்து தீவுகள் நீரில் மூழ்கும் அபாயம்குறித்து விஞ்ஞானிகள் எச்சரிக்கை விடுக்கின்றனர்.

இந்த அபாயம் எமது நாட்டின் கரையோரப் பிரதேசங்களுக்கு உண்டு. நாம் இவ்வாறான யதார்த்த நிலைகளை சந்திக்கவேண்டியுள்ள நிலையில் நாம் அப்பிரதேசங்களை நாமே நிர்வகிக்க வேண்டும் என்று கூறிக்கொண்டிருக்கின்றோம். ஏன் இந்த நிலைமை? நாம் எப்பொழுதும் முக்கியமான பிரச்சினைகளை மறந்துவிட்டு தேவையற்ற பிரச்சினைகளை தேவையான பிரச்சினைகளாக்கிக் கொண்டிருக்கின்றோம். இதுதான் உண்மை.

**அன்பு வாசகர்களே !**

"தரிசனம்" பற்றிய தங்களின் கருத்துக்கள்,
விமர்சனாங் கள் வரவேற்கப்படுகின்றன.

**அனுப்பவேண்டிய முகவரி :-**

"தரிசனம்" - வலம்புரி
இல : 3, 2ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.



## வடக்கிலிருந்து தெற்கிற்கு

(உபதலைப்பு: பாதிக்கப்பட்ட இனத்தின் பாதிக்கப்பட்டோரிடமிருந்து பாதிக்கப்பட்ட இனத்தின் பாதிக்கப்பட்டோருக்காக)

தோழர்களே நாம் மலைக்குன்றுகள் அல்ல
போட்டியிட்டு ஏறுவதற்கு
நிர்மலமான நீர் நிலைகளானோம்
ஒரே மலையிலிருந்து வீழ்ந்து

தகிக்கும் எரி தணல் அல்ல நாம்
வனத்தை எரித்துச் சாம்பலாக்க
பொழியும் மழைத்துளிகளானோம்
தகிக்கும் வனத்தைக் குளிர்விக்க


கடும் காற்றும் அல்ல நாம்
ஒலிகளை அடித்துச் செல்ல
இளம் தென்றலானோம்
இரு முனைகளையும் தழுவிச் செல்ல

கெட்ட கனவல்ல நாம்
குழந்தைகளின் துயிலைக் கலைப்பதற்கு
இனிய வருடலானோம்
இனிய துயில் கொண்டு எழுவதற்கு

இரும்போ பித்தளையோ அல்ல நாம்
அரசர்கள் மீது அமர்ந்து நசுக்குவதற்கு
தேக்கு பலா சந்தன மரங்களானோம்
மதிக்கும் அந்தஸ்தை வழங்குவதற்கு

வைக்கோலும் தென்னோலையும் அல்ல நாம்
பாழ் வீட்டின் நிழலாக இருப்பதற்கு
தோழர்களே நாம் கற்களானோம்
புதிய வீடுகளைக் கட்டியெழுப்புவதற்கு !

**தர்ஷன மேதிசின்**
*கந்துல மிட்டியாவத்த* என்ற
நூலிலிருந்து



# தரிசனம்

வலம்புரி

# பிளவுபடும் தென்னிலங்கை கட்சிகள்

இலங்கையில் நீடித்து வரும் இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான சமாதானத் தீர்வைக் காணவேண்டுமாயின் தென்னிலங்கையில் வலிமை பெற்றுள்ள அரசியல் கட்சிகளுக்கிடையே புரிந்துணர்வும், ஒற்றுமையும் ஏற்பட வேண்டும்.



இக் கருத்தியல் நீண்ட காலமாக வலியுறுத்தப்பட்டு வருகின்ற போதிலும், அதனை யதார்த்தத்தில் அடைந்து கொள்ள முடிய வில்லை.

தேசியப் பிரச்சினையாக இருக்கக் கூடிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் பொருட்டு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியும் பொது உடன்பாட்டில் சைச்சாத்திட்டுக் கொண்டன.

நாட்டின் இரு பிரதான கட்சிகளும் பொது உடன்பாட்டில்

## இனவிவகாரத்தை திசை திருப்பும்

இணங்கிக்கொண்டமை, சமாதான முயற்சிக்கான நல்ல சகுனமாகக் கருதப்பட்டது. அதனை உலக நாடுகளும் வரவேற்றுக்கொண்டன.

### கட்சித் தாவலுக்கு பொது உடன்பாடே மூலகாரணம்

நீண்டகாலமாக எட்டப்படாத ஓர் இலக்கு இரு பிரதான கட்சிகளின் இணக்கமான உடன்பாட்டின் மூலம் அடையப்பட்டதாகக் கருதப்பட்டது. ஆனால் அந்த உடன்பாடே தென்னிலங்கை அரசியல் கட்சிகள் மேலும் பிளவுபடுவதற்குக் காரணமாயிற்று.

அதாவது, ஐக்கிய தேசியக் கட்சியுடன் உடன்பாட்டைச் செய்வது, பாராளுமன்றத்தில் பொது விடயங்களில் இணைந்து செயற்படுவது, ரணில் விக்கிரமசிங்கவிற்குப் பிரதமர் பதவியை வழங்குவது என்ற மாயத் தோற்றத்தை பொது உடன்பாட்டினூடாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஏற்படுத்தியிருந்தார்.

## வடக்கின் கருத்து

ஜனாதிபதித் தேர்தலில் தோல்வி கண்ட ரணில் விக்கிரமசிங்க பொது உடன்பாட்டின் மூலமாகப் பிரதமர் பதவி கிடைப்பதை உள்ளூர விரும்பியிருந்தார்.

தனக்குப் பிரதமர் பதவி கிடைப்பதனூடாக ஐக்கிய தேசியக் கட்சி கண்டுள்ள பலவீனத்தை அகற்ற முடியும் என்ற நினைப்பில், ரணில் விக்கிரமசிங்க எல்லாம் மறந்த இன்ப நிலையில் இருக்க, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய தலைகளைத் தன்பக்கம் இழுத்துக் கொண்டார்.

பொது உடன்படிக்கை செய்தமைக்காக, ஒரு கட்சியில் இருந்து மற்றைய கட்சிக்கு உறுப்பினர்கள் மாறிக்கொள்வது தவறானதல்ல. அது அவர்களின் உரிமை என அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே கூறிக் கொள்ள, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடனான உடன்படிக்கையிலிருந்து விலகிக் கொள்வதாக, ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்தது.

ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து விலகி, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் இணைந்து அமைச்சுப் பதவியை பங்கு போட்டுக்கொண்டவர்கள் தம்மை ஐக்கிய தேசியக் கட்சியின் அதிருப்தியாளர்கள் எனக் கூறிக்கொண்டனர்.

இது இந்தியாவில் விபசாரத்தில் ஈடுபடும் பெண்கள் தம்மை பாலியல் தொழிலாளர்கள் என அழைப்பது போல இருந்தது. அதாவது ஐக்கிய தேசியக் கட்சியின் அதிருப்தியாளர்கள் என்றால் அவர்கள் ஆளுங் கட்சியுடன் சேரவேண்டுமா என்ன?

அமைச்சுப் பதவிக்காக ஜனாதிபதி மஹிந்தவிடம் சரணடைந்துவிட்டு, போலிக் கதைகள் அளக்கும் அநாகரிகம் ஜனநாயக அரசியலுக்கு எப்போதுமே ஆரோக்கியமானதல்ல.

### மந்திரிப் பதவி இழந்த மங்கள -சிறீபதி

ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த கருஜெயசூரியா, ராஜித சேனாரட்ண, பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், மலிந்த மொறகொட உள்ளிட்ட பத்துப் பேரை தன்பக்கம் இழுத்து ஆட்கொண்ட ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மங்கள சமரவீர, சிறீபதி சூரியாராய்ச்சி, அனுரா பண்டாரநாயக்க ஆகியோரின் அமைச்சுப் பதவிகளை பறித்தெடுத்தார்.

அமைச்சை இழந்த அனுரா, ஆற்றொணாது ஜனாதிபதியிடம் சரண்புகுந்து பறித்ததை மீட்டெடுக்க மங்களவும் சிறீபதியும் சீற்றம் கொண்டனர். மஹிந்த ராஜபக்ஷ விடுதலைப் புலிகளுடன் உடன்பாடு செய்து கொண்டார்.

அவர்களுக்கு நிதி வழங்கினார் என அவர்கள் கொட்டி முழங்கினர். அமைச்சுப் பதவியைப் பறித்தாலும் மங்களவும் சிறீபதியும் அனுராவைப் போல தன்னிடம் வந்து சேருவர் என எண்ணியிருந்த மஹிந்தவுக்கு,மங்கள, சிறீபதி பிரச்சாரம் அதிர்ச்சியைக் கொடுத்தது.

மங்களசமரவீரவினதும், சிறீபதி சூரியாராய்ச்சியினதும் அமைச்சுப் பதவிகளைப் பறிப்பதன் மூலமாக அரசியல் தலைவர்களை அடக்கிவைக்க முற்பட்ட மஹிந்த ராஜபக்ஷவுக்கு தனது அதிரடியான நடவடிக்கை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைப் பிளவுபடுத்தும் என்பது தெரியாமல் போயிற்று.

ஐக்கிய தேசியக்கட்சி என்ற யானையை சறுக்கி விழ வைத்த மஹிந்த ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி என்ற கதிரையும் உடைந்து போகலாமென நினைக்கவில்லை.

இப்போது மங்களசமரவீர, சிறீபதி சூரியாராய்ச்சி ஆகியோர் இணைவினால் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி மக்கள் பிரிவு முகிழ்ப்படைந்துள்ளது.

மங்களவின் புதிய கட்சி எடுத்த எடுப்பில் அரசியல் செல்வாக்கைப் பெற முடியாமல் இருப்பினும், ஐக்கிய தேசியக் கட்சி , ஜே.வி.பி. ஆகியவற்றுடன் கூட்டுச் சேர்வதனூடாக ஆளும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை வீழ்த்தமுடியும். அதற்கான கள நிலைமை சாதகமாகவேயுள்ளது.

அவ்விதம் மங்கள -ரணில், ஜே.வி.பி. என்ற கூட்டு வலிமைபெறுமாயின் மஹிந்தவின் அரசு இறுதிமூச்சு விட ஐக்கிய தேசியக் கட்சியின் அதிருப்தியாளர் குழு, அநாதரவாகி கருஜெயசூரியா தலைமையில் புதிய கட்சியை பிரசவிப்பர். அதற்கு மேலாக மஹிந்தவின் அரசில் முக்கிய பதவி வகித்தவர்கள் மங்களவின் புதிய கட்சியில் புகுமுக விழாச் செய்வர்.

அப்போது முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமார துங்க சுதந்திரக் கட்சியின் மக்கள் பிரிவில் இணைந்து கொள்ள தென்னிலங்கை அரசியல் கட்சிகள் சுய அரசியல் இலாபம் கருதிய உழைப்பில் ஈடுபடும்.

தேவசகாயம் ஜெயகுமார்
புவியியல் ஆசிரியர்

அப்போதெல்லாம் இனப்பிரச்சினைக்கான தீர்வுகள் - சமாதான முயற்சிகள் யாவும் மறந்து விடப்பட்டிருக்கும். அழிவுகளும், அட்டூழியங்களும் எடுக்கின்ற விஸ்வரூப மேனிக்கு மனிதக் குருதியால் அபிஷேகம் நடக்கும். இதற்கான பூர்வாங்கக் கிரியைகளே இன்றைய அரசியல் கட்சிகளின் உடைபாடுகளாகும்.



## இராணுவ முகாமிலிருந்து கடிதங்கள்...

அன்பே நந்தா,

இன்று காலைதான் வந்து சேர்ந்தோம்
பிரச்சினை இல்லை.
மடியில்
ரைஃபிளை இறுகப் பற்றியிருந்ததில்
தூக்கமுமில்லை
கனவுகள்;
மிகவும் பயங்கரம்
திடீரென விழிப்பு.

ரயில் நிலையத்தில்
நீயும் மாமியும் அழுத அழுகையில்
நானுமே பயந்தேன்.
ஆனால்,
அனைவரும் எனக்குச் சொன்னதுபோல
வடக்கு
அப்படி ஒன்றும் பயங்கரமாகத்
தெரியவில்லை.
எங்கும் போலவே
கடைகள், தெருக்கள்,
வாகன நெரிசல்.
மனிதர்கள் தான் எமைப் பார்ப்பதேயில்லை
தற்செயலாகப் பார்க்கிறபோதும்
அவர்கள் எல்லோரது கண்களினூடும்
ஏதோ ஒன்று;

இனம் புரியாத ஓர் உணர்வு
என்னவாயிருக்கும் அது
என எனக்குப் புரியவே இல்லை.

.................................

இன்று,
.................................
மூன்று தமிழரைச் சுட்டுக்கொன்றனர்.
'நெருக்கடி மிகுந்த தெருவில்
திடீரென இவர்கள் ஓடிச் சென்றதால்,
கலவரமுற்றுச் சுட்டுவிட்டேன்
என்று சந்திர சொன்னான்; பிறகு,
விசாரணையின்றியே
இரண்டுபேரையும்
கொழும்புக்கு அனுப்பினர்
இடமாற்றம்தான்
(கொடுத்து வைத்தவர்கள்)

.................................
யாரையாவது சுட்டால்
அல்லது
சனங்கள் மீது தாக்குதல் நிகழ்த்தினால்
வீடுகளைப் பற்றவைத்தால்
உடனடியாக மாற்றம் கிடைக்கிறது.(?)

.................................
அப்புறம்,
உடனடியாக, மாற்றம் கேட்ட
எமது பிரிவு நேற்றுத் தெருவில்
இறங்கியது...
எத்தனை பேரைச் சுட்டுத் தீர்த்தது
என்ற விபரம் சரியாகத் தெரியாது
ஐம்பது அல்லது அறுபது என்று
மேஜர் நினைக்கிறார்.

.................................
அன்பே நந்தா...

ஒரு வழியாக எல்லாம் முடிந்தது
நாளை எனக்கு இடமாற்றம்!
கடவுளுக்கு நன்றி.
இன்று கடைசித் தடவையாக
நகருக்குச் சென்றேன்
அப்படி ஒன்றும் பயங்கரமாகத்
தெரியவில்லை.
முன்பு போலவே கடைகள், தெருக்கள்...
ஆனால் மனிதர்கள்தான்
முன்பு போலவும்
எம்மைப் பார்ப்பதேயில்லை...

உ.சேரன்
('மரணத்துள் வாழ்வோம்' என்ற நூலிலிருந்து)

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பாக தமிழ் மக்கள் இந் நாட்டின் பூர்வீகக் குடிகள் என்பதற்கான சான்றாதாரங்கள் தொல்லியல் அகழ்வாராய்ச்சி முதல் ஆட்சிப் பரம்பல் வரை காணப்பட்ட போதிலும் அவை மறைக்கப்பட்டு வரலாற்று திரிபுகள் மேற்கொள்ளப்பட்டன.

இத் திணிப்பு நடவடிக்கைகளைத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்துவதில் தென்னிலங்கை அரசியல் தலைமைகள் பெரும் பங்காற்றின.

அமெரிக்கா மற்றும் கனேடிய பல்கலைக்கழக தொல்பொருளியலாளர்கள் பொம்பரிப்பு - மாந்தை ஆகிய இடங்களில் செய்த அகழ்வாராய்ச்சிகள் மூலம் அவற்றில் அவர்களுடன் பங்காற்றிய உள்ளூர் வரலாற்றறிஞர்கள் தம் பழைய கருத்தை மாற்றி இலங்கை தமிழர்களினதும் தாயகம் என்பதை ஏற்றுக்கொண்டனர்.

எனினும் அவை அரசியல்வாதிகளினால் இருட்டடிப்புச் செய்யப்பட்டன. தமிழ் மக்களின் தாயகத்தை நிரூபிப்பதற்கு ஏற்புடைய ஆதாரங்கள் இருந்த போதிலும் தமக்கென தனியானதொரு நாடு இருக்கவேண்டும்.

அதற்கு தமிழ் மக்களை இந் நாட்டில் இருந்து ஓரங்கட்டவேண்டும் என்ற சிங்களத் தலைமைகளின் சிறுமைத்தனம், தமிழ் மக்களை விழிப்படையச் செய்ததுடன் தமது தாயகத்தை வரையறுத்துக் கொள்ள வேண்டிய கட்டாயத்திற்கும் ஆளாக்கியது. ஒட்டுமொத்தத்தில் தமிழர் தாயகம் என்ற எல்லையிடலை வரையறுத்துக் கொள்ள வேண்டிய கட்டாயத்திற்கு தமிழ் மக்களை சிங்களத் தலைமைகளே ஆக்கின என்பது மறுக்கமுடியாத உண்மையாகும்.

ஒரு விடயம் பற்றி அனுதாபம் இருந்தால்தான் அதைப் புரிந்து கொள்ள முடியும்.

-ராஜாஜி

வலம்புரி

# சமாதானம் சாத்தியப்படாதாயின் யுத்தம் சாத்தியப்படுமா?

அரசும் விடுதலைப்புலிகளும் அழைப்பு விடுத்தால் சமாதான முயற்சிகளை முன்னெடுக்க முடியுமென நோர்வே அறிவித்ததாகச் செய்திகள் வெளியாகியிருந்தன.

நோர்வேயின் அறிவிப்பாக வெளிவந்த இச்செய்தியினால் மீண்டும் சமாதானப் பயிர் தளிர்விடுமென நம்பியிருந்த வேளை அந்த நம்பிக்கை வெறும் புஷ்வாணம் என்பது இப்போது உறுதியாகியுள்ளது.

அரசும் விடுதலைப்புலிகளும் அழைப்பு விடுத்தால் சமாதானப் பேச்சு முன்னெடுக்கலாம் எனத் தெரிவித்ததாக வெளிவந்த செய்தியை நோர்வே மறுத்துள்ளது.

அதேநேரம் விடுதலைப்புலிகளுடன் பேச்சு நடாத்துவதற்கு அரசு தயாரில்லை எனப் பாதுகாப்புத் தொடர்பான பேச்சாளர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

இதனிடையே நோர்வேயின் தூதுவர் பௌயரின் இலங்கைக்கான விஜயம் சாத்தியப்படாது என்பதும் உறுதியாகிவிட்டது. ஆக, இலங்கையில் நீடித்து வரும் இனப்பிரச்சினைக்கான முடிபு என்ன? என்பது தெரியாத விடயமாகவேயுள்ளது.

விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தாமல் இனப்பிரச்சினைக்கான தீர்வென்பது எக்காலத்திலும் சாத்தியப்படாது என்பது நிறுத்திட்டமான உண்மை.

இந்த யதார்த்தத்தை அரசு உணர்ந்துள்ள போதிலும் அதற்கேற்றவாறான நடவடிக்கைகள் ஏதும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

மாறாகத் தீர்வுத் திட்டத்தைத் தயாரிக்கும் சர்வகட்சிக் குழுக் கூட்டம் கூடி காலம் கடத்துகின்றது. தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுக்காமல் ஆரம்பிக்கப்பட்டுள்ள சர்வகட்சிக் குழுக் கூட்டம் எடுக்கின்ற தீர்வு யாருக்கானது?

சிறுபான்மைத் தமிழ் மக்களுக்குத் தீர்வுத் திட்டம் தயாரிக்கப்படுவதாகவிருந்தால் அதில் தமிழ் மக்களின் பிரதிநிதித்துவம் இடம்பெற்றிருக்க வேண்டும்.

அதைவிடுத்துத் தனித்து பெரும்பான்மையினம் கூடித் தயாரிக்கின்ற தீர்வுத் திட்டமானது நாடு எங்களுடையது, நாங்களே சிறுபான்மைக்கான உரிமையை வழங்குவோம், நாங்கள் கொடுப்பதை அவர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதுபோல் அரசின் செயற்பாடு அமைந்துள்ளது.

சர்வகட்சிக் குழுவில் எட்டப்படும் தீர்வுத் திட்டத்தைத் தமிழ் மக்கள்-விடுதலைப்புலிகள் ஏற்கத் தவறும் பட்சத்தில் அரசின் அடுத்த கட்ட நடவடிக்கை என்னவாகவிருக்கும்?

அந்த நடவடிக்கை இப்போது முன்னெடுக்கப்படுகின்ற யுத்த முனைப்புக்களைவிட வேறானதா? அதுவும் யுத்தமானதாயின் தீர்வுத் திட்டம் என்பது தேவையற்றதாகிவிடும்.

எனவே இனப்பிரச்சினைக்கான தீர்வுவென்பது ஒன்றில் சமாதான வழியில் அல்லது யுத்த வழியில் அமைய வேண்டும். யுத்தத்தின் வழியில் தீர்வு என்பது சாத்தியமானதாயின் அதனைக் கடந்த இருபது வருடங்களில் எட்டியிருக்க வேண்டும்.

ஆக, யுத்தம்என்பது இனப்பிரச்சினைக்கான தீர்வாக இருக்க மாட்டாது. ஆகவே கடந்த கால அனுபவங்களைநிகழ்காலத்தில் பிரயோகிப்பது எதிர்கால அமைதிக்கும் சமாதானத்திற்கும் உதவுவதாக இருக்கும்.இதைவிடுத்து யுத்தமே முடிபு என்றால் அழிவே அதன் விளைவாகும்.

# உள்ளூராட்சிமன்ற வேட்பு மனுக்களை ரத்துச்செய்ய சட்டத்தில் திருத்தம்

கிழக்கு மாகாணத்தில் ஒத்திவைக்கப்பட்டுள்ள 9 உள்ளூராட்சி மன்றங்களுக்கும் சமர்ப்பிக்கப்பட்டுள்ள சகல வேட்பு மனுக்களையும் ரத்துச் செய்யும் வகையில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் கட்டளைச் சட்டத்தை விசேட ஏற்பாடுகள் சட்டமொன்றின் மூலம் திருத்தியமைப்பதற்கு தேவையான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியதாக அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான அநுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்தார்.

அமைச்சரவை முடிபுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்றுக் காலை அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற போதே அவர்இவ்வாறு தெரிவித்தார். இங்கு அமைச்சர் மேலும் கூறியதாவது;

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் கட்டளைச் சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றபிரேரணையை உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் அமைச்சரவைக்குச் சமர்ப்பித்திருந்தார்.

கிழக்கு மாகாணத்தில் அடுத்து வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களுக்குப் புதிதாக வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்வதற்கு வசதி செய்யும் வகையில் விசேட ஏற்பாடுகள் சட்டம் ஒன்றின் மூலம் கட்டளைச் சட்டம் திருத்தியமைக்கப்பட வேண்டும் என்பதை அமைச்சர் சுட்டிக்காட்டியிருந்தார்.

அத்துடன் குறித்த தேர்தல்களை நடத்துவதற்காக உள்ளூராட்சி மன்ற தேர்தல் கட்டளைச் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்டிருந்த அறிவுறுத்தல் அனைத்தையும் செல்லுபடியற்றதாக்க வேண்டும் என்றும் வேட்பு மனுக்களைச் சமர்ப்பித்தற்காகச் செலுத்தப்பட்ட வைப்புத் தொகைகளை மீளப் பெற்றுக்கொள்வதற்கு வேட்பாளர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும் என்றும் அமைச்சர் கோரியிருந்தார்.

அந்த அடிப்படையிலேயே அதற்கான அனுமதியை அமைச்சரவை வழங்கியது. வடக்குக் கிழக்கு மாகாணங்களில் 77 உள்ளூராட்சி மன்றங்கள் உள்ளன. அவற்றில் 2க்கு போட்டியின்றி உறுப்பினர்கள் தெரிவாகினர். 33 உள்ளூராட்சி மன்றங்களுக்குத் தேர்தல் மூலம் உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

எஞ்சிய 42 உள்ளூராட்சி மன்றங்களுக்கு வேட்புமனுக்கள் கோரப்பட்டபோதும் எதிர்பாராத சூழல்காரணமாக இது வரை தேர்தல் நடத்தப்படவில்லை. (ச-5)

# கரும்புலிகள் நாளையொட்டி நேற்று யாழில் பாரிய சோதனை நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

கரும்புலிகள் நாளையொட்டி யாழ்.குடாநாட்டில் நேற்றுப் பாரிய சோதனை நடவடிக்கைகளை இராணுவத்தினர் மேற்கொண்டனர். நாவற்குழிச் சந்தி, கைதடிச்சந்தி மற்றும் சாவகச்சேரிப் பகுதிகளில் நேற்றுக் காலை வாகனங்களில் பயணம் செய்தவர்கள் கடும்சோதனைக்குள்ளாக்கப்பட்டனர்.

தெல்லிப்பழையில் நேற்றுக் காலை சுற்றிவளைப்புத் தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டதுடன் வீடுவீடாகச் சென்றும் சோதனையிட்டனர். சங்குவேலி, சண்டிலிப்பாய் சந்தி, சங்கானைச் சந்தி, கோண்டாவில் கிழக்கு, மேற்கு சந்திகள், ஊரெழு, தட்டாதெருச் சந்தி, ஓட்டுமடம் சந்தி ஆகிய இடங்களிலும் பாரிய சோதனைகள் நடாத்தப்பட்டன.

காங்கேசன்துறைவீதி, பலாலி வீதி, பருத்தித்துறை வீதி, கண்டிவீதி ஆகிய இடங்களில் திடீர் திடீரென வாகனங்கள் மற்றும் வீதியால் செல்வோரை வழிமறித்தும் சோதனைகளுக்கு உட்படுத்தினர்.

யாழ்.நகர நுழைவாயில்களிலும் நேற்று கடும் சோதனை மேற்கொள்ளப்பட்டது. இதேவேளை நேற்று மாலை யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்தில் விளையாடிக் கொண்டிருந்த இளைஞர்களை அங்கு வந்த இராணுவத்தினர் பிடித்துப் பல மணிநேரம் தடுத்து வைத்த பின் விடுதலை செய்தனர்.

மாலை 5 மணிக்கு தடுத்து வைக்கப்பட்ட அவர்கள் இரவு 7.30 மணிக்கே விடுதலை செய்ததாகத் தெரிவிக்கப்பட்டது. சுமார் 30 ற்கும் மேற்பட்ட இளைஞர்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்ததாகக் கூறப்பட்டது. (எ-1)

# அமைச்சுப் பதவியில் இருப்பதைவிட வீட்டில் இருப்பது மிகச் சிறந்தது

## அமைச்சர் ஜெயராஜின் கூற்றுக்குக் கூட்டமைப்புப் பதில்

(கொழும்பு)

அரசாங்கத்துடன் இணையும் எண்ணம் தமக்கு இல்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தெரிவித்துள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலுள்ள சிலர் அரசாங்கத்துடன் இணையவுள்ளதாக அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே ஊடகவியலாளர்களிடம் தெரிவித்துள்ளமை குறித்துக் கருத்துத் தெரிவித்தபோதே கூட்டமைப்பினர் இதனைத் தெரிவித்துள்ளனர்.

தேர்தல் வாக்குறுதிகளின் அடிப்படையில் செயற்படுவோமே தவிர எந்தவொரு கூட்டமைப்பு எம்.பியும் அரசின் பக்கம் செல்ல மாட்டார்கள் என வவுனியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர் கூறினார்.

அமைச்சுப் பதவியைப் பெற்று நாடாளுமன்றத்தில் இருப்பதை விட வீட்டிற்குச் சென்று அங்கு இருப்பது எவ்வளவோ மேலானது என அவர் கூறினார்.

இதேவேளை இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்திலேயே தமது கட்சியுள்ளதாகவும் அமைச்சுப் பதவிகளுக்கு அலையப் போவதில்லை என்றும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகம் ஒன்றிற்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அமைச்சுப் பதவியை ஏற்பதற்கென அலைபவர்கள் அல்ல. அமைச்சுப் பதவிகளைப் பெறுவதற்காகப் போட்டி போட்டவர்களே இவ்வாறு கூறிவருகின்றனர் என அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# நற்பண்புச் செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடாத்தும் புண்ணிய கிராம வேலைத் திட்டத்தை செயற்படுத்தும் ஒரு நாள் நற்பண்பு செயலமர்வின் தென்மராட்சிச் செயலமர்வு நாளைக் காலை 8.30 மணிக்கு கொடிகாமம் தவசிக்குளம் கண்ணகை அம்மன் ஆலயத்தில் அபிவிருத்தி உதவியாளர் செல்வி சி.மகிந்தினி தலைமையில் நடைபெறும். (ச)

# வெள்ளி நற்சிந்தனை 25

## நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி

கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்

அழகு எல்லோரையும் கவரும் ஆற்றல் கொண்டது. மக்கள் தம்மை அழகுபடுத்தப் பல முயற்சிகளை மேற்கொள்கின்றனர். உச்சிமுதல் உள்ளங்கால் வரை தமது உடலை அழகுபடுத்த முனைகின்றனர். இளமைக்காலத்து அழகினையே எல்லோரும் முதுமை வரை பேணவிரும்புகின்றனர். நரைத்துப் போன தலைமுடியை கருஞ்சாந்தால் கறுப்பு நிறமாக்கி சுருக்கம் நிறைந்த முகத்தை வர்ணப்பூச்சால் நிரப்பி கவர்ச்சியான தோற்றத்தை நிலைநாட்ட அல்லற்படுகின்றனர்.

இயற்கையான நிலையில் மனிதன் அழகாகத் தோன்றலாம். அதற்குரிய எளிமையான செயற்பாடுகளை எமது தமிழ் இலக்கியப் பாடல்கள் எடுத்துரைத்துள்ளன. எம்முடைய அழகான தோற்றத்திற்கு உதவும் செயற்பாடுகளால் ஒரு முழுமையான நிலையான அழகை எமது நாட்டிற்கே நல்க முடியும். அதற்கு முதலில் பாழாகத் தோற்றும் நிலையை விளக்குவது நல்லதென நமது முன்னோர் கருதினர். எனவே அவற்றை விளக்கிக் கூறியுள்ளனர்.

முக அழகுத் தோற்றத்தில் நீறு அணியாத நெற்றி வீணானது. முழு உடல் அழகிற்கும் நிலைக்களனாகக் கருதப்படும் தோற்றத்தைப் பெற எமது உணவுப் பழக்கத்தில் கவனம் தேவை. நெய்யில்லாமல் நாம் உண்ணும் உணவு வீணானது. ஒரு ஊருக்கு அழகு தருவது ஆறு. ஆறில்லாத ஊரின் அழகு பாழானது. வீட்டின் அழகு நிலைக்கு உடன் பிறப்பு மிக முக்கியமானது. மாறுபடாமல் கலகலப்பாக உடன் பிறப்புக்கள் இணைந்து வாழும் வாழ்க்கை மிக அழகானது.

அழகான வீடு இருந்தபோதும் இல்லறத்தைச் செய்யும் இல்லாள் இல்லாவிட்டால் அந்த வீடு பாழடைந்த வீடாகவே காணப்படும். இல்லத்தினை ஆள்கின்ற இல்லாள் வீட்டின் அழகுக்கு இன்றியமையாதவள். மனைக்குத் தலைவியாக 'மனைவி' ஆக சிறப்புப் பெற்றவர்.

எனவே அழகு என்பது தனிமனிதனுடைய கவர்ச்சி நிலையன்று. வீடு இணைந்த, ஊருடன் ஒன்றியைந்த நாட்டின் நிறைவான அழகாகும். இந்த நிலைபெற்ற அழகை நிலைநாட்டப் பாழ்பட்டுக் கிடக்கும் நிலைகளைச் சீர் செய்ய வேண்டும். எமது முன்னோரின் எண்ணத்தில் அழகு பற்றிய கருத்து நாடு தழுவியதாகப் பரந்திருந்தது.

வழிபாடும், வளமான உணவும், இயற்கையான நீர் வளமும், உடன்பிறப்பின் உதவியும், அறஞ்செய்ய துணையான பெண்மையும் இருந்தால் அழகு எம்மோடு என்றும் நிலைத்திருக்கும் என அவர்கள் காட்டிய வழியே எமக்கு நல்வழியாகும்.

'நீறு இல்லா நெற்றி பாழ், நெய்யில்லா உண்டி பாழ்
ஆறு இல்லா ஊருக்கு அழகுபாழ் - மாறு இல்
உடன்பிறப்பு இல்லா உடம்பு பாழ், பாழே
மடக்கொடி இல்லா மனை'

(நல்வழி-24)

# அமெரிக்காவுடனான இராணுவ ஒப்பந்தம் எதிர்த்து உயர் நீதிமன்றில் வழக்குத் தாக்கல்

(கொழும்பு)

இலங்கைக்கு இராணுவ உதவி வழங்கும் வகையிலான அமெரிக்காவுடனான 'பெற்றுக்கொள்ளுதலும் பரஸ்பரம் பகிர்ந்து கொள்ளுதலும்' ஒப்பந்தத்தை எதிர்த்து உயர் நீதிமன்றில் ஜனநாயக இடது முன்னணியின் செயலாளர் வாசுதேவ நாணயக்கார வழக்குத் தொடர்ந்துள்ளார்.

வாசுதேவ நாணயக்கார தாக்கல் செய் துள்ள இந்த அடிப்படை உரிமை மீறல் வழக் கின் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது; அமெரிக்காவுக்கு நன்மையளிக்கும் வகையில் இலங்கைக்கு இழப்பு ஏற்படுத் தும் வகையில் இந்த ஒப்பந்தம் உருவாக்கப் பட்டுள்ளது.இந்த ஒப்பந்தமானது அமைச்சர்களுக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் தெரி விக்கப்படாமல் ஜனாதிபதி மகிந்த ராஜ பக்ஷவின் சகோதரரும் பாதுகாப்பு அமைச் சின் செயலாளருமான கோத்தபாய ராஜபக்ஷ, அமெரிக்க தூதுவர் றொபேட் ஓ பிளக் ஆகி யோரால் கடந்த மார்ச் 5ஆம் திகதி இரகசிய மான முறையில் உருவாக்கப்பட்டது.

இலங்கை நாடாளுமன்றில் முன்வைக் கப்படவும் இல்லை. ஒப்பந்தம் கைச்சாத்தி டப்பட்டு பல மாதங்களாகிவிட்ட நிலையிலும் நாடாளுமன்றின் ஒப்புதலையும் பெறவில் லை. இது தொடர்பில் ஜூன் 5 ஆம் திகதி இலங்கை நாடாளுமன்றில் ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வரப்பட்டது.

அப்போது நாடாளுமன்றத்தின் தலை வர் நிமால் சிறிபால டி சில்வா ஒப்பந்தத்தை முழுமை யாக தாக்கல் செய்யாமல் ஒரு பகுதியை மட்டுமே நாடாளுமன்றில் தாக்கல் செய்தார்.

ஒப்பந்தத்தில் 14 இணைப்புக்கள் இருப் பதாகக் கூறப்பட்டாலும் ஒரு இணைப்பைக் கூட நாடாளுமன்றில் தாக்கல் செய்யவில் லை. இந்த ஒப்பந்தமானது இரு தரப்பும் சம நிலையில் நின்று விருப்பமுடன் உருவாக்கிக் கொண்ட ஒப்பந்தம் அல்ல.

இலங்கைக்கு நேரிடையாகவும் மறைமுகமாகவும் அழுத்தங்களைத் தொடர்ந்து கொடுப்பதன் மூலமாக அமெரிக்காவுக்கு சாதகமாகும் வகையில் உருவாக்கப்பட்டுள் ளது. இது ஒரு இராணுவ ஒப்பந்தம்.

பொது மக்கள் மற்றும் இராஜதந்திர அழுத்தங்களின் காரணமாக யு.என்.எவ். அரசாங்க காலத்தில் இந்த ஒப்பந்தம் கைச் சாத்திடப்படவில்லை. ஆகையால் இந்த ஒப்பந்தத்தை சட்ட விரோதமானது என்றும் கைவிடப்படவேண்டுமென்றும் நீதிமன்றம் பிரகடனப்படுத்த வேண்டும் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## இறுதித்தீர்வை முன்வைக்குமாறு...

ளையும் தொலைபேசியில் தொடர்பு கொண்ட அகாசி விரைவாக இறுதித் தீர்வை முன்வைக்குமாறு வலியுறுத்தியதாக இராஜ தந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள் ளதாவது, அன்று நடைபெற்ற இணைத்தலைமை நாடுகளின் கூட்டத்தில் ஐரோப்பிய ஒன்றியம், நோர்வே, அமெரிக்கா போன்றவை அனைத்துக் கட்சிக் குழு தொடர்பாக எதிரான நிலைப்பாட்டை கொண்டிருந்ததுடன் அது ஒரு பக்கச் சார்பான தீர்வை முன்வைக்கலாம் எனவும் தெரிவித்திருந்தன.

ஆனால் அதனை எதிர்த்த யப்பானியப் பிரதிநிதியான யசூசி அகாஷி பல தசாப்தங்களாக நடைபெற்றுவரும் போருக்கு அரசு அனைத்துக் கட்சிக் குழுவினூடாக ஒரு இறுதித்தீர்வை காணும் என தெரிவித்திருந்தார்.

இலங்கை தொடர்பாக ஏனைய இணைத் தலைமை நாடுகள் கொண்டிருந்த நிலைப் பாடு தொடர்பாக கடுமையான வாக்குவாதங்களை நடத்திய அகாஷி தனது இலங்கைக்கான அண்மைய பயணங்களின் போதான அவதானிப்புக்களையும் இலங்கை தலைவர்களுடன் நடத்திய பேச்சுக்களையும் எடுத்து விளக்கினர்.

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் அரசியல் தீர்வை காண்பதில் ஈடுபாடுகள் இல்லை.எனவேதான் நடைபெற்று வந்த பேச்சுக்கள் முடங்கிப்போயுள்ளன என இணைத்தலைமை நாடுகள் எண்ணிய போதும் அனைத்துக் கட்சிக்குழுவினூடாக கொண்டுவரப்படும் தீர்வு எல்லா கட்சிகளினாலும் ஏற்றுக்கொள்ளப்படும் என அகாஷி இணைத் தலைமை நாடுகளிடம் தெரிவித்தார்.

இறுதியில் ஜனாதிபதி மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோரை ஒரு இறுதித்தீர்வை அனைத்துக் கட்சி குழுவினூடாக முன்வைக்குமாறு கேட்டுக்கொள்வது என நான்கு நாடுகளும் முடிபுசெய்ததுடன், இது தொடர்பாக இரு தலைவர்களுடனும் கலந்துரையாடும்படி யசூசி அகாசியிடம் ஐரோப்பிய ஒன்றியம், நோர்வே, அமெரிக்கா போன்ற நாடுகள் கேட்டுக் கொண்டதாக அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (எ-1)

## ஜே.வி.பியுடன் மங்கள தலைமையிலான...

சமரவீரவிடம் கடிதம் ஒன்றையும் கையளித்தது. அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நாடு தற்போது இக்கட்டான கால கட்டத்தில் உள்ளது. இலங்கைக்கு எதிராக சர்வதேச மட்டத்தில் பாரிய சதி முயற்சி மேற்கொள்ளப் பட்டு வருகிறது. ரணில் விக்கிரமசிங் தலைமையில் இடம் பெற்ற ஆட்சியை குறுகிய காலத்தில் விடிவுக்குக் கொண்டுவர 2004 ஆம் ஆண்டில் ஜே.வி.பியும் சுதந்திரக்கட்சியும் இணைந்து கூட்டமைப்பை உருவாக்கியது.அதற்கு நீங்கள் செய்த பங்களிப்பை எங்களால் மறக்கமுடியாது.

கடந்த 2004 ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் மற்றும் 2005 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தல் ஆகியவற்றின்போது நாங்கள் ஐ.தே.கவை தோற்கடித்தோம். ஆனால் தற்போது ஜனாதிபதி மகிந்த ராஜபக்வும் ஐ.தே.க.சென்ற பாதையிலேயே செல்கிறார். இந்த அரசாங்கத்தை உருவாக்கபாடுபட்ட அனைவரும் தற்போது கவலைப்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

இந்த அரசாங்கத்தின் தலைமை எந்த வகையில் உங்களை நடத்தியது என்று எங்களுக்குத் தெரியும்.அதனை நாங்கள் அனுமதிக்கமாட்டோம். ஆனால் அதற்கு பதிலாக ஐ.தே.கவுடன் இணைந்து செயற்பட முடியும் என்று நீங்கள் நினைத்தால் அது முகத்துடன் கோபித்துக்கொண்டு மூக்கை வெட்டுவதற்கு சமமாகும்.அத்தகைய நடவடிக்கையினை எடுக்கவேண்டாம்.

2002 ஆம் ஆண்டில் புலிகளுடன் நாட்டைக் காட்டிக்கொடுக்கும் உடன்படிக்கையை செய்த மற்றும் நாட்டின் வளங்களை விற்பனை செய்த ஐ.தே.கவுடன் இணைந்து நாட்டைக் கட்டியெழுப்ப முடியும் என்று யாராவது நினைத்தால் அது ஏமாற்றமான நடவடிக்கையாகும்.

நாட்டிற்கு வெற்றியை பெற்றுக்கொடுக்க புதிய முன்னணி அவசியமானதாகும். அந்த முன்னணி தற்போதைய அரசாங்கத்தை தோற்கடிப்பதாகவும் ஐ.தே.கவுக்கு இடம் கொடுக்காததாகவும் இருக்கவேண்டும்.

இந் நிலையில் நாட்டை கட்டி யெழுப்புவதற்காக ஜே.வி.பி.உருவாக்கும் முன்னணியில் உங்களை இணைந்து கொள்ளுமாறு கோரிக்கை விடுகின்றோம். (ச-5)

## கப்பமாக பெறப்பட்ட பணம்...

தான் வைப்பிலிடப்பட்டுள்ளது. கப்பமாகப் பெறப்பட்ட பணத்தில் பெரும் பகுதி அரசின் உயர் அதிகாரி ஒருவரின் தனிப்பட்ட கணக்கில்தான் வைப்பிலிடப்பட்டுள்ளது.

கடத்தல் தொடர்பில் கைதான கஜதீரவிடம் விசாரணை நடாத்தும் குற்றப்புலனாய்வுப் பிரிவின் தலைவர் முன்னாள் சுதந்திரக் கட்சியின் வேட்பாளராவார். இந்த நிலையில் அவரால் எவ்வாறு விசாரணை நடாத்த முடியும்? என்றும் அவர் மேலும் கேள்வி எழுப்பினார்.

அவசர காலச்சட்டம் நீடிப்புப் பிரேரணை மீதான விவாதத்தை எதிர்க்கட்சியின் சார்பில் நேற்று ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே லக்ஷ்மன் செனிவிரட்ண இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு அவர் மேலும் கூறியதாவது; ஜனாதிபதி மகிந்த கொடுத்த பணத்திலே தான் புலிகள் விமானங்களைக் கொள்வனவு செய்திருக்கின்றார்கள். வடக்குக் கிழக்கிலே புலிகளுடன் போரிட்டு மடிகின்ற எங்களுடைய இராணுவத்தின் நிலை என்ன?

அமைச்சர்கள் ஒவ்வொருவரும் பொறுப்பற்ற முறையில் பேசுகின்றனர். அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே ஒன்றைச் சொன்னால் அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல இன்னுமொன்றைக் கூறுவார். பிரதமர் அது பற்றி எனக்குத் எதுவும் தெரியாது என்பார்.

ஜே.வி.பி. ,ஜாதிக ஹெல உறுமய ஆகிய கட்சிகள் மௌனமாக இருக்கின்றன. புலிகளுக்குக் கொடுத்த பணம் தொடர்பாக இவர்கள் எதுவும் கேட்பதில்லை. ரணில் விக்கிரமசிங்க ஒரு ஐந்து ரூபாவை புலிகளுக்கு வழங்கியிருந்தால் இன்று நிலைமை என்ன? ஜே.வி.பி.சகோதரர்கள் விட்டிருப்பார்களா? ஐந்து ரூபாவை புலிகளுக்கு ரணில் கொடுத்து விட்டார் என்று கோஷமெழுப்பி லிப்ரன் சுற்றுவட்டத்தில் எத்தனை ஆர்ப்பாட்டம் செய்திருப்பீர்கள்? இப்போது ஏன் அமைதியாக் இருக்கிறீர்கள்? ஹெல உறுமய தேரர்கள் என்னகூறி மக்களிடம் வாக்குக் கேட்டார்கள்? தற்போது என்ன செய்கிறார்கள்? மக்களுக்கு கொக்குக் காட்டிவிட்டு நாடாளுமன்றக் கதிரைகளை அலங்கரிக்கிறார்கள்.

சம்பிக்க ரணவக்க அமைச்சராகியும் விட்டார். நிசாந்த கஜதீர என்பவரை தற்போது கைதுசெய்து விட்டார்கள். அவரைப் பயன்படுத்தித் தானே ஆட்களை கடத்தி கப்பம் பெறப்பட்டது. கப்பமாகப் பெறப்பட்ட பணம் கரீபியன் தீவுகளில் உள்ள வங்கிக் கணக்கொன்றில் தான் வைப்பிலிடப்பட்டுள்ளது. பெறப்பட்ட பணத்தில் அரைவாசிக்கு மேல் அரசின் உயர் அதிகாரி ஒருவரின் தனிப்பட்ட கணக்கில்தான் வைப்பிலிடப்பட்டு இருக்கிறது.

நிசந்த கஜதீரவிடம் இருந்து குற்றப்புலனாய்வுப் பிரிவுத் தலைவர் நீதியான முறையில் குற்ற ஒப்புதல் வாக்கு மூலங்களைப் பெறுவாரா? குற்றப்புலனாய்வுப் பிரிவுத் தலைவர் யார்? சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் முன்னாள் வேட்பாளர். இந்த நிலையில் அவரால் எவ்வாறு விசாரணை நடாத்த முடியும்.

என்னைப் பொறுத்தவரையில் குற்றப் புலனாய்வுப்பிரிவினரையோ அரசாங்கத்தையோ நம்பமுடியாது. எனது ஐக்கிய தேசிய கட்சியைத் தவிர வேறு எதனையும் நம்ப முடியாது. எங்களை எமது கட்சிதான் பாதுகாக்கிறது என்றார். (ச)

## இராணுவம்...

குதலில் 10 இற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளதுடன் கிளைமோர்கள் 8 உட்பட இராணுவ தளபா டங்களும் தொடர்பு சாதனமும் தமிழீழ விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை வவுனியா ஓமந்தை மேற்குப் பகுதியில் நடை ரோந்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் இடம்பெற்ற மோதலில் இரண்டு புலி உறுப்பினர்கள் கொல்லப்பட்டதோடு ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டுள்ளதாக தேசிய பாதுகாப்புக்கான ஊடக மையம் தெரிவித்துள்ளது.

இதேவேளை சிவிலியன் ஒருவரிடமிருந்து கிடைக்கப்பெற்ற தகவலொன்றையடுத்து நேற்று முன்தினம் காலை 10.30 மணியளவில் யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் இராணுவத்தினர் ஆயுதங்கள் சிலவற்றை மீட்டுள்ளனர்.

ரி-56 ரக துப்பாக்கி 1,ரி-56 ரவைக்கூடு 1, ரி-56 துப்பாக்கிக்கான ரவைகள் 29 ஆகிய ஆயுதங்களே இராணுவத்தினரால் மீட்கப்பட்டதாக தேசியபாதுகாப்புக்கான ஊடகமையம் தெரிவித்தது. (ச-5)

## 22ஆவது...

மீதான வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. அவசரகாலச் சட்டத்திற்கு ஆதரவாக 110 பேரும் எதிராக 10 பேரும் வாக்களித் தனர். 100 வாக்குகளால் இந்த சட்டம் மேலும் ஒரு மாத காலத்திற்கு நீடிக்கப்படுகிறது. இந்த அவசரகாலச் சட்டம் 2005 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் கொண்டு வரப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## சூட்டுக்காயங்களுடன்...

தமிழீழ விடுதலைப் புலிகள் மீது அதிரடிப்படையினர் நேற்று அதிகாலை 1.30 மணிக்கு தாக்குதல் நடத்தினர் என்றும் இம் மோதலின்போதே இருவரும் உயிரிழந்ததாகவும் தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. இருவரது சடலங்களும் அம்பாறை மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ச-5)

## கடந்த...

டுள்ளதனால் புலிகள் குடும்பி மலையில் இருந்து பின்வாங்கி வருகின்ற னர். கொழும்பில் கேந்திர மையங்கள் மற் றும் பிரமுகர்களை இலக்குவைத்து தாக்கு தல் நடாத்துவதற்காக கொண்டு வரப்பட்ட குண்டு பொருத்திய பார ஊர்திகள் இரண்டையும் இராணுவத்தினர் கைப்பற்றியுள்ளனர்.

இராணுவத்தினின் இந்த நடவடிக்கைக்கு இன மத,மொழி பேதங்கள் இன்றி அனைவரும் இணைந்து ஒத்துழைக்க முன்வர வேண்டும். இராணுவத்தினரின் இந்த நடவடிக்கையின்போது கடந்த ஒரு மாத காலத்திற்குள் இராணுவத்தரப்பில் 35 பேரும் பொதுமக்கள் 30 பேரும் பலியாகியுள்ளனர். மேலும் 161 இராணுவத்தினரும் பொது மக்கள் 18 பேரும் படுகாயமடைந்துள்ளனர் என்றார் அவர். (எ-1)

## தொழிலாளர்...

தலைமையகத்தில் இச் சந்திப்பு இடம் பெற்றுள்ளது.

இச் சந்திப்பில் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் மக்கள் பிரிவுடன் கூட்டுச்சேருவது குறித்தும் கலந்துரையாடப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (ச)

## யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை கடைப்பிடிக்க...

கிளிநொச்சிக்குச் சென்ற போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் விடுதலைப்புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவனை நேற்று முன்தினம் சந்தித்துப் பேசினர். கிளிநொச்சியில் ஒரு நாள் தங்கியிருந்த போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் லார்ஸ் ஜொஹான் சொல்பேர்க் தலைமையிலான குழுவினர் நேற்று வவுனியா சென்றனர்.

அங்கு செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவித்த அதன் பேச்சாளர் தொர்பினூர் ஓமர்சன் இச் சந்திப்பில் போர்நிறுத்த ஒப்பந்தத்தை முழுமையாக கடைப்பிடிக்கப்பட வேண்டுமெனவும் போர் நிறுத்த கண்காணிப்பாளர்கள் கூடிய அளவில் செயற்படவேண்டுமெனவும் விடுதலைப்புலிகள் தரப்பிலிருந்து தெரிவிக்கப்பட்டதாகக் கூறினார்.

அந்த ஒப்பந்தத்தை தொடர்ந்து கடைப் பிடிக்க தாம் உறுதியாக இருப்பதாகவும் விடுதலைப்புலிகள் தம்மிடம் தெரிவித்ததாகவும் அவர் கூறினார். இச் சந்திப்பில் நாட்டின் தற்போதைய நிலைமை மற்றும் போர் நிறுத்த ஒப்பந்தத்தை கடைப்பிடித்தல் என்பன தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டதாக அவர் கூறினார்.

நீண்ட நேரம் பேச்சு இடம் பெற்றதாகவும் அவர் கூறினார். விடுதலைப்புலிகளுடன் விவாதித்த விடயங்களை வெளியிட மறுத்த அவர், இது குறித்து மறு தரப்பினருக்கு எடுத்துச் சொல்லும் முன் அது குறித்து வெளியிடுவது நல்லதல்ல எனவும் கூறினார்.

வட மாகாணத்திற்கான அலுவலகம் வவுனியாவில் இருந்தும் கிழக்கிற்கான அலுவலகம் திருகோணமலையில் இருந்தும் செயற்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். விடுதலைப்புலிகளிடம் பேசப்பட்ட விடயங்கள் தமக்கு உற்சாகத்தைத் தருவதாகவும் அவர் கூறினார்.

விடுதலைப்புலிகள் தெரிவித்தது போன்று அரச தரப்பினரும் கூறியுள்ளனர். இரு தரப்பினரிடம் இருந்தும் சாதகமான பதில் கிடைத்துள்ளதால் போர் நிறுத்த ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவதில் எதிர்காலத்தில் சிக்கல் இருக்காது எனவும் அவர் தெரிவித்தார்.

கிளிநொச்சிக்குச் செல்வதற்கு அரசு உலங்கு வானூர்தி வசதியை செய்துதந்தது இதன் மூலம் போர் நிறுத்த ஒப்பந்தத்தை பேணவேண்டும் என்ற அரசின் விருப்பம் வெளிப்படையாகத் தெரிகிறது என்றார் ஓமர்சன். (ச)

## ஊரியல்...

இல் இருந்து 60 ஆக அதிகரிப் பதன் மூலம் நீதிமன்றங்களில் தேங்கியுள்ள வழக்குகளைத் துரிதப்படுத்த முடியும். இதற்காகவே இந்த சட்டமூலம் கொண்டு வரப்படுகிறது. நீதித்துறை சுதந்திரமாக செயற்பட வேண்டுமென்பதில் அரசாங்கம் கவனம் செலுத்துகின்றது. மாகாண மட்டத் தில் மேல் நீதிமன்றங்களை அதிகரித்தத னால் வழக்குகள் இப்போது தேங்கிக்கிடப்ப தில்லை. கொழும்புக்கு வழக்குகள் வருவது குறைவு. அத்துடன் அந்தந்த பிரதேசங்களிலேயே வழக்கு விசாரணைகள் நடைபெறு வதால் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் வழக் குகளின் எண்ணிக்கை குறைவடைந்துள் ளது என்றார் அவர். (ச-5)

## கரும்புலிகள்...

பிரபாகரன் கரும்புலிகள் மத்தியில் உரையாற்றினார்.

இதில் தளபதிகள், பொறுப்பாளர்கள், போராளிகள் கலந்து கொண்டு கரும்புலி மாவீரர்களை நினைவுகூர்ந்தனர். வடமராட்சி நெல்லியடியில் நிலை கொண்டிருந்த இராணுவ முகாம் மீது 1987 ஆம் ஆண்டு யூலை 5 ஆம் நாள் கப்டன் மில்லர் நடத்திய கரும்புலித்தாக்குதலே விடுதலைப்புலிகளின் முதலாவது கரும்புலித் தாக்குதலாகும். தாயக விடுதலைக்காக கரும்புலிகள் தங்களது பய ணத்தின் 20 ஆம் ஆண்டை நிறைவு செய்திருக்கிறார்கள். (ச)

### தேவை

பிஸ்கட், கேக் செய்யக் கூடிய பெண் பிள்ளைகள் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

சிலன் பேக் ஹவுஸ்
நவாலி தெற்கு,
நவாலி

(C-202)

இப் பத்திரிகை வலம்புரி அச்.கோ. ... பனத்தாரால் இல.03, இரண்டாம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.07.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.